# கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

**வரையறுக்கப்பட்ட லங்கா சதொச வினால் 2014 ஆம் 2015 ஆம் ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட அரிசி இறக்குமதிச் செயற்பாடு தொடர்பாக 2016 செப்தெம்பர் 20 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டத்தின் வேண்டுகோளின் படி கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் சமர்ப்பிக்கப்படும் விசேட கணக்காய்வு அறிக்கை**

## பொருளடக்கம்


| | அத்தியாயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | மேற்குறித்த அறிக்கை விநியோகிப்பதன் பின்னணியும் அறிக்கையின் தன்மையும் | 66 |
| 2. | இவ் அறிக்கை தயாரிக்கப்படுகையில் பின்பற்றப்பட்ட கணக்காய்வு நடைமுறைகள் | 66 |
| 2.1 | பதிவேடுகள், புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பரீட்சித்தல் | 66 |
| 2.2 | ஏனைய ஆய்வுகள் | 68 |
| 3. | நோக்கெல்லையின் வரையறைகள் | 68 |
| 4. | பொதுத் தகவல்கள் | 70 |
| 4.1 | கம்பனிக் கூட்டமைப்பு | 70 |
| 4.2 | கம்பனியின் நோக்கம் | 71 |
| 4.3 | பணிப்பாளர் சபைக் கட்டமைப்பு | 73 |
| 4.4 | பதவியணி விபரம் | 74 |
| 4.5 | இலங்கையில் நெல் உற்பத்தி, உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்படும் அரிசி விநியோகம் மற்றும் அரிசி நுகர்வு | 75 |
| 4.6 | 2012 முதல் 2015 ஆம் ஆண்டு வரை தனியார் துறை மற்றும் அரசாங்கத் துறையால் மேற்கொள்ளப்பட்ட அரிசி இறக்குமதி தொடர்பான தகவல்கள் | 75 |
| 4.7 | லங்கா சதொச வினால் அரிசி கொள்வனவு செய்யப்பட்ட முறை | 76 |
| 4.8 | லங்கா சதொச நிலையத்தினால் மாதாந்தம் இறக்குமதி செய்யப்படும் அரிசி விற்பனை | 77 |
| 4.9 | லங்கா சதொச நிலையத்திடம் உள்ள அரிசி இருப்பின் அளவு | 78 |
| 5. | லங்கா சதொச நிறுவகத்தால் 2014 ஆம் 2015 ஆம் ஆண்டுகளின் போது அரிசி இறக்குமதி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு | 80 |
| 5.1 | உள்நாட்டு சந்தையில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மெ.தொ. 18,134 கொள்வனவு செய்யப்பட்டமை | 82 |
| 5.2 | பிற்கொடுப்பனவு முறை (Documents Against Payment) இன் கீழ் அரிசி மெ.தொ. 29,262 இறக்குமதி செய்யப்படல் | 83 |
| 5.3 | 2014 யூலை 31 ஆம் திகதிய 14/0940/540/005 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்தில் 50,000 மெ.தொ. அரிசி | 85 |

|  |  |  |
|---|---|---|
|  | இறக்குமதி செய்யப்பட்டமை |  |
| 5.4 | 42002140026193 ஆம் இலக்க நாணயக் கடிதத்தின் மூலம் 1040 மெ.தொ. நாடு அரிசி இறக்குமதி செய்தல் | 90 |
| 5.5 | BTD-63519 ஆம் BTD-63537 ஆம் இலக்க நாணயக் கடிதத்தின் மூலம் 90,901 மெ.தொ. அரிசி இறக்குமதி செய்யப்பட்டிருந்தமை | 91 |
| 5.6 | 42002140033274 ஆம் இலக்க மற்றும் 42002140033283 ஆம் இலக்க நாணயக் கடிதங்களின் மூலம் 61,354 மெ.தொ அரிசி இறக்குமதி செய்யப்பட்டமை. | 102 |
| 5.7 | அரசாங்கம் ஒன்றால் அரசாங்கத்திற்கு வழங்கப்படும் அடிப்படையில் பங்களாதேஷ் அரசாங்கத்திடம் இருந்து 25,000 மெ.தொ. நாடு அரிசி இறக்குமதி செய்யப்படல். | 104 |
| 6. | இறக்குமதி செய்யப்பட்ட அரிசி எஞ்சிய இருப்பு | 107 |
| 7. | இறக்குமதி செய்யப்பட்ட அரிசிக்காக ஏற்கப்பட்ட மொத்தக் கிரயம் | 108 |
| 8. | இறக்குமதி செய்யப்பட்ட அரிசி விற்பனையிலிருந்து பெறப்பட்ட வருமானம் | 112 |
| 9. | அரிசி இறக்குமதி செய்யப்பட்டமையால் ரூபா 15,157,031,018 தொகையான நட்டம் லங்கா சதொச நிறுவகத்திற்கு∴ அரசாங்கத்திற்கு நேர்ந்திருந்தமை | 115 |
| 10. | அரிசி இறக்குமதிக்காக நிதி வழங்கல் | 115 |
| 11. | இறக்குமதி செய்யப்பட்ட அரிசிக்காக மேலதிக களஞ்சிய வசதிகள் பெற்றுக்கொள்வதற்கு நேர்ந்தமை | 116 |
| 12. | பொது அவதானிப்புகள் | 121 |
| 13. | முறைமைகளும் கட்டுப்பாடுகளும் | 124 |
| 14. | பரிந்துரைகள் | 125 |
| 15. | முடிவுகள் | 128 |

# வரையறுக்கப்பட்ட லங்கா சதொச (லங்கா சதொச) வினால் 2014 ஆம் 2015 ஆம் ஆண்டுகளில் அரிசி இறக்குமதி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கை

## மேற்குறித்த அறிக்கை விநியோகிப்பதன் பின்னணியும் அறிக்கையின் தன்மையும்

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் மற்றும் லங்கா ச.தொ.ச நிறுவகங்கள் தொடர்பாக 2016 செப்தெம்பர் 20 ஆம் திகதி 14:30 மணிக்கு நடைபெற்ற அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டத்தில் லங்கா ச.தொ.ச நிறுவகத்தால் 2014 ஆம் 2015 ஆம் ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட அரிசி இறக்குமதி தொடர்பாக பரீட்சிக்கப்பட்டு அறிக்கை ஒன்றை குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளிற்கமைய இவ் அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது. (இணைப்பு 01)

## 2. இவ் அறிக்கை தயாரிக்கப்படுகையில் பின்பற்றப்பட்ட கணக்காய்வு நடைமுறைகள்

பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன.

### 2.1 பதிவேடுகள், புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பரீட்சித்தல்

(அ) லங்கா ச.தொ.ச நிறுவகத்தின் களஞ்சியத்தில் உள்ள அரிசி தொடர்பாக பரீட்சிப்பதற்காக கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சுச் செயலாளரால் 2015 ஒக்டோபர் 16 ஆம் திகதி நியமிக்கப்பட்ட ஐவர் அடங்கிய குழு அறிக்கை.

(ஆ) லங்கா ச.தொ.ச நிறுவகத்தின் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி தொடர்பாக பரீட்சிப்பதற்காக லங்கா ச.தொ.ச நிறுவகத்தின் தலைவரால் 2015 ஒக்டோபர் 19 ஆம் திகதி நியமிக்கப்பட்ட குழு அறிக்கை.

(இ) இலங்கை மத்திய வங்கியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆண்டறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட இலங்கையில் மேற்கொள்ளப்படும் வருடாந்த நெல் மற்றும் அரிசி உற்பத்தி தொடர்பான தரவுகள்.

(ஈ) விவசாயத் திணைக்களத்தின் சமூக பொருளாதார மற்றும் திட்டமிடல் நிலையத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இலங்கையின் அரிசித்

தேவைப்பாடு, வருடாந்த உற்பத்தி மற்றும் அரிசி இறக்குமதி தொடர்பான தரவுகள்.

(உ) கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள்.

(ஊ) பொதுத் திறைசேரின் பல்வேறு திணைக்களங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள்.

(எ) லங்கா ச.தொ.ச நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களும் தரவுகளும், அரிசி இறக்குமதியுடன் தொடர்புபட்ட கோவைகளும்.

(ஏ) இறக்குமதி செய்யப்பட்ட அரிசிக் களஞ்சியம் முத்திரையிடப்படுவது தொடர்பாக பொது மக்கள் சுகாதார பரிசோதகர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள்

(ஐ) இலங்கை சுங்கத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 2012, 2013, 2014 ஆம் 2015 ஆம் ஆண்டுகளின் அரிசி இறக்குமதி தொடர்பாக தகவல்களும் தரவுகளும்.

(ஒ) நெற் சந்தைப்படுத்தல் சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள்.

(ஓ) கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள்.

(ஔ) உணவு ஆணையாளர் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட களஞ்சிய வாடகை தொடர்பான தகவல்கள்.

(க) இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொடர்பான தகவல்கள்.

### 2.2 ஏனைய ஆய்வுகள்

(அ) இறக்குமதி செய்யப்பட்ட அரிசி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த மீதொட்டமுல்ல, வெயங்கொட, மெகலம் மற்றும் ஏகல களஞ்சியங்களில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வு.

(ஆ) ACE கொள்கலன் தளத்தில் வாடகை அடிப்படையில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்த அரிசி கொள்கலன்களில் அடங்கிய அரிசி தொடர்பான பௌதீக ஆய்வு.

(இ) லங்கா சதொச நிறுவக உத்தியோகத்தர்களிடம் இருந்தும் பொது சுகாதாரப் பரிசோதக உத்தியோகத்தர்களிடம் இருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட எழுத்துமூல அறிக்கைகள்.

### 3. நோக்கெல்லையின் வரையறைகள்

இவ் அறிக்கையைச் சமர்ப்பிக்கையில் எனது நோக்கெல்லையில் வெளிப்பட்ட வரையறைகளுக்கு உட்பட்டிருந்தமை வலியுறுத்தப்பட்டுள்ளது.

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அரச கம்பனிகள் தொடர்பாக கணக்காய்வு செய்யப்படுவதற்கான அதிகாரம் கிடைக்கப்பெறும் வரையில், லங்கா சதொச நிறுவகத்தின் நேரடியான கணக்காய்வு ஒன்றை மேற்கொள்ள முடியாமை/ சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றிராமை.

(ஆ) 2014 ஆம் ஆண்டிலிருந்து நேர்ந்த இவ் விடயத்திற்குட்பட்ட செயற்பாடு மற்றும் இது தொடர்பான ஓர் ஆய்வு நடாத்தப்படுவதற்கான செயற்பாடு, கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒப்படைக்கப்பட்ட தினத்திற்கும் இடையே 2 வருடங்கள் அளவிலான கால இடைவெளி காணப்பட்டமை.

(இ) அரிசி இருப்பை ஆய்வு செய்கையில் நிலவிய இடையூறுகள்

(i) லங்கா சதொச நிலையத்தின் அரிசி இருப்பு தொடர்பாக பௌதீக இருப்பு ஆய்வும் மேற்கொள்ளப்பட்டிராமை.

(ii) அரிசிக் களஞ்சியங்களில் முறையான இருப்புப் பதிவேடு பேணப்பட்டிராமை.

(iii) பௌதீக ஆய்வு மேற்கொள்ளப்படக் கூடிய வகையில்/ கணிப்பிடக் கூடிய வகையில் களஞ்சியங்களில் காணப்பட்ட அரிசி இருப்பு, களஞ்சியப்படுத்தப்பட்டிராமை.

(iv) மீதொடமுல்ல, வேயங்கொட, மெகலம் மற்றும் ஏகல களஞ்சியங்கள் ஆய்வு செய்யப்படும் சந்தர்ப்பம் வரை காணப்பட்ட அரிசி இருப்புகளில் பெரும்பாலானவை ஆய்வுசெய்ய இயலாத வகையில் சேதமுற்றிருந்தமை.

(v) ஒவ்வொரு களஞ்சியங்களிலும் நிலையத்திலும் காணப்பட்ட இருப்பு தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் பதியப்பட்ட/ கணனிமயமாக்கப்பட்ட முறையான நடைமுறை காணப்பட்டிராமை.

(ஈ) இணைப்பு 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்விற்குத் தேவையான தகவல்களை கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சும் லங்கா நிறுவகமும் வழங்கியிராமை.

(உ) இணைப்பு 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்விற்குத் தேவையான தகவல்களை வழங்கப்படுகையில், கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சிலும் லங்கா சதொச நிறுவகத்திலும் பாரிய தாமதம் நிலவியமை.

(ஊ) அரிசி இறக்குமதி நடவடிக்கைகள் நேர்ந்த 2014 ஆம் 2015 ஆம் ஆண்டுகளின் போது நிறுவகத்தில் சேவையில் ஈடுபட்ட உயர் முகாமைத்துவ நிலையிலும் ஏனைய பதவியணியிலும் இருந்தவர்களில் அனேகமானோர் தற்போது நிறுவகத்தில் இருந்து விலகிச் சென்றிருந்தமையால் தகவல்கள் பெறப்படுகையில் நேர்ந்த சிக்கல்கள்/ தாமதங்கள்/ இயலாமை.

(எ) நிறுவகத்தின் கணக்குகளும் தகவல்களும் பேணப்படும் முறைமை மற்றும் நடைமுறைகளில் பாரிய குறைபாடுகள் நிலவியமை.

(ஏ) நிறுகத்தின் அரிசி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிற்காக பின்வரும் நிறுவகங்களால் லங்கா சதொச நிறுவகத்தின் தகவல்கள், பதிவேடுகள் மற்றும் கோவைகள் கொண்டு செல்லப்பட்டு சில கோவைகளினதும் பதிவேடுகளினதும் போட்டோ பிரதிகள் நிறுவகத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிராமை.

(i) சனாதிபதி விசாரணை ஆணைக்குழு (பாரிய ஊழல், மோசடி, அரச வளங்கள், நலன்கள், அதிகாரம் மற்றும் அதிகாரப் பொறுப்பு முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படுவது தொடர்பாக விசாரித்தல்)

(ii) நிதி மோசடி விசாரணைப் பிரிவு

(iii) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகள் விசாரணை ஆணைக்குழு

## 4. பொதுத் தகவல்கள்

### 4.1 கம்பனிக் கூட்டமைப்பு

லங்கா ச.தொ.ச கம்பனி 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் 2005 ஒக்டோபர் 26 ஆம் திகதி கூட்டமைக்கப்பட்டு, 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் 2010 மார்ச் 19 ஆம் திகதி மீளப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அக் கம்பனியின் கூறப்பட்ட மூலதனம் ரூபா 893,752,720 தொகையானதுடன் லங்கா ச.தொ.ச நிறவகத்தின் தலைவரால் 2014 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய கம்பனிப் பதிவாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பங்கு வழங்கல்கள் தொடர்பான படிவம் 06 இன் படி, அப் பங்குகளின் தொகுப்பு பின்வருமாறாகும். (இணைப்பு 04)

| பங்கு உரிமை | பங்குகளின் அளவு | பெறுமதி ரூபா | நூற்றுவீதம் |
|---|---|---|---|
| திறைசேரிச் செயலாளர் | 87,095,381 | 870,953,810 | 97.44 |
| கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் | 2,279,884 | 22,798,840 | 2.55 |
| பணிப்பாளர் சபை | 7 | 70 | 0.000001 |

## 4.2 கம்பனியின் நோக்கம்

**சாங்கமிக விவஸ்தாவலிய படி, கம்பனியின் நோக்கம் பின்வருமாறாகக் காணப்பட்டது. (இணைப்பு 05)**

(அ) சகல வகையிலான அத்தியாவசிய பொருட்கள் மற்றும் ஏனைய வியாபாரப் பொருட்கள் நுகர்வோருக்கு விற்பனை செய்யும், விள்பனைக்கு வழங்கப்படும் மற்றும் பகிர்ந்தளிக்கப்படும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல்.

(ஆ) கம்பனியிடம் உள்ள சில்லறை விற்பனை நிலையங்களிடம் இருந்து ஏற்கக்கூடிய விலைக்கு நுகர்வோருக்கு கொள்வனவு செய்யப்படுவதற்காக அத்தியாவசிய விற்பனைப் பொருட்கள் உள்ளமையை உறுதிப்படுத்தல்.

(இ) நுகர்வோர் மற்றும் ஏனைய எந்த வகையிலுமான பொருட்கள் தொடர்பாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி மற்றும் மொத்த சில்லறை வியாபாரிகள் மற்றும் வாடிக்கையாளர்களாகச் செயற்படுவதை ஆரம்பித்தல், ஸ்தாபித்தல், முகாமைத்துவம் செய்தல் மற்றும் பேணல், பொருள் இறக்குமதியாளர்கள் தொடர்பில் அத்தகைய நடவடிக்கைகள், தேவையான சந்தர்ப்பத்தில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் இருந்து (சதொச) கொள்வனவு செய்யப்பட இயலாதென எண்ணக்கூடிய பொருட்களுக்கு மட்டுப்படுத்தப்படக்கூடியதாக இருத்தல்.

(ஈ) விவசாய உற்பத்தி நுகர்வு மற்றும் ஏனைய சகல வகைப் பொருட் கொள்வனவாளர்கள், சேகரிப்பாளர்கள், வழங்குனர்கள், களஞ்சியப் பொறுப்பாளர்கள், பொதிபண்ணுபவர்கள், விநியோகிப்போர், விற்பனையாளர்கள் மற்றும் வழங்குனர்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுத்தல். பொருள் கொள்வனவாளர்கள் மற்றும் சேகரிப்பாளர்களாக அத்தகைய நடவடிக்கைகள், உரிய சந்தர்ப்பங்களின் போது கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் இருந்து (சதொச) உரிய காலப்பகுதியின் போது கொள்வனவு செய்யப்பட முடியாத அல்லது சேகரிக்கப்பட முடியாத பொருட்களுக்கு வரையறுக்கப்படக்கூடியதாக இருந்தது.

(உ) முழுமையான கொள்வனவு, குத்தகை அல்லது வாடகைக்குப் பெற்றுக்கொள்வதன் மூலம் களஞ்சியம் மற்றும் வணிக வசதிகளை ஏற்படுத்தி களஞ்சியசாலைகள், விற்பனை மற்றும் களஞ்சிய இடவசதிகளையும் வசதிகளையும் விற்பனை செய்தல், குத்தகைக்கிடல், வாடகைக்கு வழங்குதல் மற்றும் விற்பனை செய்தல்.

(ஊ) வியாபார மற்றும் ஏனைய தனிப்பட்ட தொழில் முயற்சியாளர்களுக்கு பயிற்சி மற்றும் பயிற்றப்படாத மற்றும் ஏனைய மனித வள சேவை ஒப்பந்தங்களின் மூலம் வழங்கல்.

(எ) நுகர்வோருக்கு எந்தவிதத்திலுமான சேவையையும் வழங்குதல்.

(ஏ) அத்தியாவசியப் பொருட்களின் சில்லறை வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளாத விடத்து கம்பனியால் நுகர்வோருக்கு சேவை வழங்கும் அடிப்படை நோக்கில் இங்கு குறிப்பிடப்பட்ட வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் கம்பனியின் நடைமுறை, வியாபார மற்றும் வணிக உறுதிப்பாட்டை நிலைப்படுத்தல்.

(* அகவிதியின் சிங்கள மூலப் பிரதி ஒன்று கணக்காய்விற்குக் கிடைக்கப்பெற்றிராமையால் ஆங்கிலப் பிரதியின் மொழிபெயர்ப்பே இங்கு தரப்பட்டுள்ளது.)

## 4.3 பணிப்பாளர் சபைக் கட்டமைப்பு

கம்பனியின் அகவிதியின் படி, பணிப்பாளர் சபை 11 அங்கத்தவர்களைக் கொண்டிருக்க வேண்டிய போதிலும், தற்போதைய பணிப்பாளர் சபைக்கு 07 அங்கத்தவர்கள் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தனர். பணிப்பாளர் சபையில் அதிகார பூர்வமாக நியமிக்கப்படும் நிரந்தர உறுப்பினரான கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பணிப்பாளர் சபையிலிருந்து 2015 நவம்பர் 11 ஆம் திகதி விலகியிருந்ததுடன் உரிய அமைச்சரால் பெயரிடப்பட்ட 03 அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. 2006 ஆம் ஆண்டு முதல் இது வரை செயற்பட்ட பணிப்பாளர் சபையின் தகவல்கள் பின்வருமாறாகும்.

| | பெயர் | பணிப்பாளர் சபை பதவி | நியமிக்கப்பட்ட திகதி | விலகிய திகதி |
|---|---|---|---|---|
| | ------------- | ------------- | ------------- | ------------- |
| 1. | திரு.கே.என்.ஆர் பெர்னான்டோ | பணிப்பாளர் / தலைவர் | 2006.12.01 | 2015.01.21 |
| 2. | திரு. கிரிஷாந்த கபுவத்த | பணிப்பாளர் | 2010.05.31 | 2015.02.06 |
| 3. | திரு. டீ.ஜீவனாதன் | பணிப்பாளர் | 2010.06.30 | 2015.11.11 |
| 4. | திரு. விமல ஜயான் முனசிங்ஹ | பணிப்பாளர் | 2010.07.01 | 2015.01.07 |
| 5. | திரு. என்.எம்.டீ.நவரத்ன | பணிப்பாளர் | 2010.07.19 | 2015.05.25 |
| 6. | திரு.டீ.அஷித் பீ. அபேசேகர | பணிப்பாளர் | 2011.12.21 | 2015.01.20 |
| 7. | திரு.டபிள்யூ.எச். கருணாரத்ன | பணிப்பாளர் | 2012.01.16 | 2014.06.30 |
| 8. | திரு.டீ.டீ.உபுல் சாந்த டி அல்விஸ் | பணிப்பாளர் | 2014.07.01 | 2015.07.15 |
| 9. | திரு. கஸ்மீர் கிரான் அத்தபத்து | பணிப்பாளர் / தலைவர் | 2015.01.28 | 2015.08.03 |
| 10. | திருமதி. எஸ்.சேனாரத்ன | பணிப்பாளர் | 2015.02.27 | 2015.08.03 |
| 11. | திரு. ஏ.யூ.எம். யாசீர் | பணிப்பாளர் | 2015.02.27 | தற்போதைய அங்கத்தவர் |
| 12. | திரு. எம். எச்.எம். ஹடாட் | பணிப்பாளர் | 2015.03.24 | 2016.09.10 |
| 13. | திரு. கலாநிதி. ஆர்.எம்.கே.ரத்நாயக்க | பணிப்பாளர் | 2015.05.25 | 2015.11.16 |
| 14. | திரு.எம்.எச்.எம்.ஷப்ராஸ் | பணிப்பாளர் | 2015.06.08 | தற்போதைய அங்கத்தவர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 15. | திரு.சமீர ரீ. ஜயவர்தன | பணிப்பாளர் | 2015.06.11 | 2015.07.28 |
| 16. | திரு. ஜீ.ஏ.அஜித் பிரியன்த | பணிப்பாளர் | 2015.06.11 | 2015.07.28 |
| 17. | திரு. டபிள்யூ.ஏ.தம்மிக ராஜபக்ஷ | பணிப்பாளர் | 2015.07.15 | 2015.10.08 |
| 18. | திரு. சேன ஸ்ரீனாத் மீயனவல | பணிப்பாளர் / பதில் தலைவர் | 2015.08.03 | 2015.09.15 |
| 19. | திரு. எம்.ரிஸ்வான் ஹமீம் | பணிப்பாளர் | 2015.10.13 | தற்போதைய அங்கத்தவர் |
| 20. | திரு. கலாநிதி ரொஹான்த அத்துகோரல | பணிப்பாளர் / தலைவர் | 2015.11.20 | தற்போதைய தலைவர் |
| 21. | திரு. ஆர். ருஷான்தன் | பணிப்பாளர் | 2015.12.01 | தற்போதைய அங்கத்தவர் |
| 22. | திரு. ஏ.ஜீ. குரும்பலபிட்டிய | பணிப்பாளர் | 2015.12.01 | தற்போதைய அங்கத்தவர் |
| 23. | திருமதி. ஆர்.ஏ.இன்திகா ரணதுங்க | பணிப்பாளர் | 2015.12.29 | தற்போதைய அங்கத்தவர் |

## 4.4 பதவியணி விபரம்

2016 மே 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிலையத்தின் பதவியணி தகவல்கள் பின்வருமாறாகும்.

| விபரம் | அங்கீகரிக்கப் பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்கள் | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| உயர் முகாமைத்துவ நிலை | 14 | 10 | 04 | - |
| மத்திய முகாமைத்துவ நிலை | 23 | 11 | 12 | - |
| கனிஷ்ட முகாமைத்துவ நிலை | 31 | 24 | 07 | - |
| முகாமைத்துவ உதவியாளர்கள் | 578 | 438 | 140 | - |
| ஆரம்ப நிலை | 2,429 | 2,842 | - | 413 |
| மொத்தம் | 3,075 | 3,325 | 163 | 413 |

## 4.5 இலங்கையில் நெல் உற்பத்தி, உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்படும் அரிசி விநியோகம் மற்றும் அரிசி நுகர்வு

(மெ.தொ.ஆயிரம்)

| ஆண்டு | நெல் உற்பத்தி | | மொத்த நெல் உற்பத்தி | உள்நாட்டு அரிசி உற்பத்தி * | இறக்குமதி செய்யப்பட்ட அரிசி | மொத்த அரிசி வழங்கல் | அரிசி நுகர்வு |
|---|---|---|---|---|---|---|---|
| | சிறு | பெரும் | | | | | |
| 2015 | 2,877 | 1,942 | 4,819 | 3,369 | 286 | 3,655 | 2,438 |
| 2014 | 2,236 | 1,145 | 3,381 | 2,364 | 600 | 2,964 | 2,404 |
| 2013 | 2,846 | 1,774 | 4,620 | 3,231 | 23 | 3,254 | 2,382 |
| 2012 | 2,717 | 1,129 | 3,846 | 2,895 | 36 | 2,931 | 2,364 |
| 2011 | 1,996 | 1,898 | 3,894 | 2,723 | 28 | 2,751 | 2,427 |

* உள்நாட்டு அரிசி உற்பத்தி நெல் 01 மெ.தொன் இற்கு அரிசி 0.7 மெ.தொ. ஆகக் கணிப்பிடப்பட்டுள்ளது.

(தரவு மூலங்கள் : இலங்கை மத்திய வங்கியின் 2014 ஆம் 2015 ஆம் ஆண்டு ஆண்டறிக்கைத் தரவுகள் விவசாயத் திணைக்களத்தின் சமூக பொருளாதார மற்றும் திட்டமிடல் நிலையப் பணிப்பாளரின் 2016 நவம்பர் 17 ஆம் திகதிய SEPC/STAT/AMD/IT(DOA) ஆம் இலக்க) கடிதத்தில் இருந்து பெற்றுக்கொண்ட தகவல்கள்)

## 4.6 2012 முதல் 2015 ஆம் ஆண்டு வரை தனியார் துறை மற்றும் அரசாங்கத் துறையால் மேற்கொள்ளப்பட்ட அரிசி இறக்குமதி தொடர்பான தகவல்கள்

| ஆண்டு | தனியார் துறை | அரசாங்கத் துறை | | | (மெ.தொ.) கூட்டுத்தொகை |
|---|---|---|---|---|---|
| | | லங்கா சதொச | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | ஏனைய அரச நிறுவகங்கள் | |
| 2015 | 118,856 | 167,265 | - | 553 | 286,674 |
| 2014 | 504,525 | 90,294 | 1,150 | 5,007 | 600,976 |
| 2013 | 21,896 | - | 1,093 | 60 | 23,049 |
| 2012 | 26,508 | - | 9,732 | - | 36,240 |
| | **671,785** | **257,559** | **11,975** | **5,620** | **946,939** |

(தரவு மூலம் : இலங்கை சுங்கத்தின் தரவு முறைமை)

## 4.7 லங்கா சதொச வினால் அரிசி கொள்வனவு செய்யப்பட்ட முறை

லங்கா சதொச வினால் 2014 ஆம் 2015 ஆம் ஆண்டுகளின் போது பின்வருமாறு அரிசி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

| | கொள்வனவு செய்யப்பட்ட முறை | அளவு (மெ.தொ) | கிரயம், காப்புறுதி, கேள்வு (CIF) பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|
| (அ) | உள்நாட்டு உற்பத்தி அரிசி கொள்வனவு | 46,668 | 2,688,941,911 |
| (ஆ) | இறக்குமதி செய்யப்பட்ட அரிசி உள்நாட்டுச் சந்தையில் கொள்வனவு | 18,134 | 1,199,495,609 |
| (இ) | பிற்கொடுப்பனவு முறையின் கீழ் நேரடியாக வெளிநாட்டு சந்தையில் இருந்தான அரிசிக் கொள்வனவு | 29,262 | 1,851,055,933 |
| (ஈ) | லங்கா சதொச வினால் நாணயக் கடிதத்தின் மூலம் நேரடியாக வெளிநாட்டுச் சந்தையில் இருந்தான கொள்வனவு | 1,040 | 62,634,808 |
| (உ) | அமைச்சரவை அங்கீகாரத்தில் வெளிநாட்டுச் சந்தையிலிருந்து கொள்வனவு செய்தல் | 75,002 | 4,347,942,373 |
| (ஊ) | பொதுத் திறைசேரியின் உடன்பாட்டுடன் வெளிநாட்டுச் சந்தையிலிருந்து அரிசி கொள்வனவு செய்யப்படல் | 152,255 | 9,734,901,658 |
| | கூட்டுத்தொகை | 322,361 | 19,884,972,292 |

## 4.8 லங்கா சதொச நிலையத்தினால் மாதாந்தம் இறக்குமதி செய்யப்படும் அரிசி விற்பனை

பின்வரும் காரணங்களால் மாதாந்தம் அரிசி விற்பனை தொடர்பான தகவல்களை வழங்கப்பட முடியாதென லங்கா சதொச நிலையத்தின் தலைவரால் 2016 நவம்பர் 28 ஆம் திகதி இலக்கமிடப்படாத கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. (இணைப்பு 06)

(அ) லங்கா சதொச 321 விற்பனை நிலையங்கள் அளவில் நாடெங்கிலும் இருந்த போதிலும், இவற்றில் 220 விற்பனை நிலையங்கள் அளவில் கணனி வலையமைப்பில் இருக்கவில்லை.

(ஆ) கணனி வலையமைப்பிற்கு உட்பட்டிராத 220 விற்பனை நிலையங்களின் விற்பனைத் தகவல்கள் பிரதான கணனி முறைமைக்குள் உள்ளடக்கப்படுகையில் 05 பிரதான விற்பனைப் பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டு உள்ளடக்கப்பட்டதன் காரணமாக அரிசி விற்பனை வேறாக இனங்காணப்பட முடியாதிருந்தது.

## 4.9 லங்கா சதொச நிலையத்திடம் உள்ள அரிசி இருப்பின் அளவு

2014 ஆம் 2015 ஆம் ஆண்டுகளின் போது ஒவ்வொரு மாதத்தின் இறுதித் திகதியின் போதும் பின்வருமாறு அரிசி இருப்பு காணப்பட்டது.

| ஆண்டு | மாதம் | மாதாந்த இருப்பின் அளவு (மெ.தொன்) | | | | அவ் அரிசி இருப்பின் விற்பனைக்காக போதிய மாதங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | பொன்னி சம்பா | நாடு | வெள்ளை அரிசி | மொத்தம் | |
| 2014 | சனவரி | | | | | |
| | பெப்ரவரி | | | | | |
| | மார்ச் | | | | | |
| | ஏப்ரல் | | | | | |
| | மே | | | | | |
| | யூன் | | | | | |
| | யூலை | | | | | |
| | ஆகஸ்ட் | | | | | |
| | செப்தெம்பர் | | | | | |
| | ஒக்டோபர் | | | | | |
| | நவம்பர் | 5,435 | 8,943 | 32,153 | 46,531 | |
| | திசெம்பர் | 2,878 | 9,800 | 37,820 | 50,498 | |
| 2015 | சனவரி | 1,016 | 19,347 | 37,646 | 58,009 | |
| | பெப்ரவரி | 27,203 | 24,971 | 30,176 | 82,350 | |
| | மார்ச் | 23,680 | 28,604 | 33,362 | 85,646 | |
| | ஏப்ரல் | 7,828 | 14,804 | 30,427 | 53,059 | |
| | மே | 27,462 | 11,856 | 26,969 | 66,287 | |
| | யூன் | 37,278 | 14,495 | 23,625 | 75,398 | |
| | யூலை | 35,255 | 11,546 | 21,032 | 67,833 | |
| | ஆகஸ்ட் | 35,794 | 10,387 | 18,782 | 64,963 | |
| | செப்தெம்பர் | 51,028 | 9,352 | 16,523 | 76,903 | |
| | ஒக்டோபர் | 50,719 | 7,830 | 13,323 | 71,872 | |
| | நவம்பர் | 46,847 | (29,239) | 10,468 | 28,076 | |
| | திசெம்பர் | 56,470 | 3,472 | 6,977 | 66,919 | |

* லங்கா சதொச வினால் 2014 சனவரி முதல் ஒக்டோபர் வரையான காலப்பகுதிக்கு உரித்தான அரிசி இருப்பின் அளவும் 2014 ஆம் 2015 ஆம் ஆண்டுகளின் மாதாந்த விற்பனை தொடர்பான தகவல்களும் வழங்கப்பட்டிராமையால் ஒவ்வொரு மாத இறுதியின் போதும் நிலவிய அரிசி இருப்பின் அளவு, விற்பனைக்குப் போதிய மாதங்களின் அளவு யாது என்பது குறித்து கணிப்பிடப்பட முடியாதிருந்தது.

* மேற்குறித்த தகவல்களில் 321 விற்பனை நிலையங்களில் நிலவிய அரிசி இருப்பு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

* 2015 நவம்பர் மாத இறுதியில் நிலவிய நாடு அரிசியின் இருப்பு மெ.தொ. 29,239 பற்றாக்குறையாகக் குறிப்பிடப்பட்டிருந்தமை சர்ச்சைக்குரிய விடயமாகும்.

* களஞ்சியங்களில் நிலவிய இருப்பின் அளவு, களஞ்சியப் பொறுப்பாளர்களிடம் இருந்து தொலைபேசி மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை, இருப்புப் பதிவேடு முறையாகப் பேணப்பட்டிராமை, இருப்பு பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிராததன் காரணமாக வழங்கப்பட்டிருந்த மேற்குறித்த இருப்பு அளவின் சரியான தன்மை குறித்து கணக்காய்விற்கு திருப்தி கொள்ள முடியாதிருந்தது.

## 5. லங்கா சதொச நிறுவகத்தால் 2014 ஆம் 2015 ஆம் ஆண்டுகளின் போது அரிசி இறக்குமதி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி, 2014 ஆம் 2015 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 15,996,534,772 செலவிடப்பட்டு அரிசி மெ.தொ 257,559 நாணயக் கடிதம் ஆரம்பிக்கப்படுவதன் மூலமும் பிற்கொடுப்பனவு முறையின் கீழ் இந்தியாவில் இருந்தும் பங்களாதேஷில் இருந்தும் இறுக்குமதி செய்யப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக ரூபா 1,199,495,609 தொகையான இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மெ.தொ. 18,134 உம் உள்நாட்டுச் சந்தையில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. விபரம் பின்வருமாறாகும்.

| பிற்கொடுப்பனவு முறை அல்லது நாணயக் கடித இல. | நாணயக் கடிதம் ஆரம்பிக்கப்பட்ட திகதி | நாணயக் கடிதத்தின் பெறுமதி (ஐ.அமெ.டொ) | அரிசி வகை | வழங்குனர் | கிடைத்த அளவு (மெ.தொ) | கி.கா.கே (CIF) பெறுமதி ரூபா | 1 கி.கி. இற்கு கி.கா.கே. (CIF) பெறுமதி ரூபா | நிதி வழங்கல் |
|---|---|---|---|---|---|---|---|---|

### 1. உள்நாட்டுக் கொள்வனவு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| உள்நாட்டு இறக்குமதி அரிசிக் கொள்வனவு | | | | 14 வழங்குனர்கள் | 18,134 | 1,199,495,609 | | லங்கா சதொச |

### 2. லங்கா சதொச நேரடியாக அரிசி இறக்குமதி செய்தல்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| பிற்கொடுப்பனவு முறை (DP) | | | **நாடு மற்றும் சம்பா அரிசி** | **07 வழங்குனர்கள்** | **29,262** | **1,851,055,933** | | **லங்கா சதொச** |
| 42002140026193 | 2014.09.22 | 455,000 | நாடு அரிசி | Omvishkar Exports | 1,040 | 62,634,808 | 60.23 | மக்கள் வங்கி |

**3. அமைச்சரவை அங்கீகாரத்தின் படி வெளிநாட்டுச் சந்தையிலிருந்து அரிசி இறக்குமதி செய்தல்**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 42002140024186 | 2014.09.01 | 21,500,000 | வெள்ளை அரிசி | United Foods (pvt) Ltd | 50,002 | 2,843,606,997 | 56.87 | மக்கள் வங்கி |
| BTD-M 064568 | 2014.12.10 | 11,250,000 | நாடு அரிசி | பங்களாதேஷ அரசாங்கம் | 25,000 | 1,504,335,376 | 60.17 | இலங்கை வங்கி |

**4. பொதுத் திறைசேரி இணக்கப்பாட்டுடன் வெளிநாட்டுச் சந்தையிலிருந்து அரிசி இறக்குமதி செய்தல்**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| BTD-M 63519 | 2014.10.29 | 1,994,018 | நாடு அரிசி | ACP Industries Ltd. | 4,887 | 268,319,420 | 54.90 | இலங்கை வங்கி |
| BTD-M 63519 ( நீடிக்கப்பட்டது) | 2015.02.17 | 18,056,000 | பொன்னி சம்பா அரிசி | ACP Industries Ltd. | 37,704 | 2,500,017,885 | 66.31 | இலங்கை வங்கி |
| BTD-M 63537 | 2014.10.30 | 2,403,837 | பொன்னி சம்பா அரிசி | ACP Industries Ltd. | 4,926 | 323,514,220 | 65.68 | இலங்கை வங்கி |
| BTD-M 63537 ( நீடிக்கப்பட்டது) | 2015.02.13 | 21,996,163 | பொன்னி சம்பா அரிசி | ACP Industries Ltd. | 43,384 | 2,861,893,578 | 65.97 | இலங்கை வங்கி |
| 42002140033283 | 2014.12.03 | 12,150,000 | வெள்ளை அரிசி | United Foods (pvt)Ltd | 30,000 | 1,630,038,846 | 54.33 | மக்கள் வங்கி |
| 42002140033274 | 2014.12.03 | 15,300,000 | பொன்னி சம்பா அரிசி | Trident Chemphar Ltd | 31,354 | 2,151,117,709 | 68.61 | மக்கள் வங்கி |
| **மொத்தம்** | | | | | **275,693** | **17,196,030,381** | | |

மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு இறக்குமதி தொடர்பான அவதானிப்புகளும் பின்வருமாறாகும்.

## 5.1 உள்நாட்டு சந்தையில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மெ.தொ. 18,134 கொள்வனவு செய்யப்பட்டமை

லங்கா சதொச நிலையம் உள்நாட்டுச் சந்தையில் 14 வழங்குனர்களிடம் இருந்து ரூபா 1,199,495,609 பெறுமதியான இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மெ.தொ. 18,134 ஐ 2014 ஏப்ரல் 22 ஆம் திகதி முதல் 2014 திசெம்பர் 12 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது கொள்வனவு செய்திருந்தது. (இணைப்பு 07)

இது தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) லங்கா சதொச நிறுவகத்தின் முகாமையாளர் – கொள்வனவுகள் (மலிகைப் பொருட்கள்) ஆல் சமர்ப்பிக்கப்பட்ட 2016 நவம்பர் 11 ஆம் திகதிய இலக்கமிடப்படாத கடிதத்தின் படி, உள்நாட்டுக் சந்தையில் இருந்து ரூபா 1,199,495,609 பெறுமதியான இறக்குமதி செய்யப்பட்ட அரிசி 18,134 மெ.தொ. கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் லங்கா சதொச தலைவரால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி தொடர்பான விசாரணைக்காக நியமிக்கப்பட்ட குழு அறிக்கையின் படி, லங்கா சதொச வினால் உள்நாட்டுச் சந்தையில் இருந்து ரூபா 1,457,866,378 பெறுமதியான இறக்குமதி செய்யப்பட்ட அரிசியில் 27,072 மெ.தொ. கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் படி அரிசி 8,938 மெ.தொ. அளவிலான வேறுபாடு நிலவியது. (இணைப்பு 08 மற்றும் 09)

(ஆ) லங்கா சதொச நிறுவகம் அரசாங்கக் கம்பனி ஒன்றானமையால், முறையான கொள்வனவு நடைமுறை ஒன்று தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்தைப் பெற்றிருக்க முடியும். அவ்வாறல்லாத சந்தர்ப்பத்தின் போது 2006 சனவரி 25 ஆம் திகதிய தே.கொ.ந. சுற்றறிக்கை இல. 08 இன் அரசாங்க கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். இங்கு லங்கா சதொச நிறுவகத்தால் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்ட கொள்வனவு நடைமுறை ஒன்று இன்மையால் 14 வழங்குனர்கள் தேர்ந்தெடுக்கப்படுகையில் அரசாங்க கொள்வனவு நடைமுறை வழிகாட்டல் ஒழுங்குவிதிகள் பின்பற்றப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. (இணைப்பு 10)

(இ) அரசாங்க கொள்வனவு நடைமுறை வழிகாட்டல் ஒழுங்குவிதியின் 8.9.1 (ஆ) வழிகாட்டலின் படி, ரூபா 500,000 இற்கு மேற்படும் சகல பொருட்கள் அல்லது சேவைகளுக்காகவும், வழங்கலின் போது முறையான ஒப்பந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட வேண்டிய போதிலும் ரூபா 1,199,495,609 தொகையான மேற்குறித்த அரிசி கொள்வனவின் போது லங்கா சதொச வினால் 14 வழங்குனர்களுடன் உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. (இணைப்பு 11)

(ஈ) மேலே குறிப்பிடப்பட்டவாறு கொள்வனவு நடைமுறைகள் இன்றி வழங்குனர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தமையால் வழங்குனர்களிடம் இருந்து பல்வேறு விலைகளின் கீழ் அரிசி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

## 5.2 பிற்கொடுப்பனவு முறை (Documents Against Payment) இன் கீழ் அரிசி மெ.தொ. 29,262 இறக்குமதி செய்யப்படல்

லங்கா சதொச நிறுவகம் தனது சந்தை வலையமைப்பில் விற்பனைக்காக பிற்கொடுப்பனவு முறையின் கீழ் (Document Against Payment) 2014 ஏப்ரல் 10 ஆம் திகதி முதல் 2014 திசெம்பர் 29 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 21 சந்தர்ப்பங்களில் ரூபா 1,000,181,682 (ஐ.அமெ.டொ. 7,538,520) பெறுமதியான பொன்னி சம்பா அரிசி 14,739 மெ.தொ. ஐயும் ரூபா 850,874,251 (ஐ.அமெ.டொ. 6,410,550) பெறுமதியான நாடு அரிசி 14,523 மெ.தொ. உமாக ரூபா 1,851,055,933 (ஐ.அமெ.டொ. 13,949,070 ) பெறுமதியான 29,262 மெ.தொ. அரிசியை 07 இந்திய வழங்குனர்களிடம் இருந்து இறக்குமதி செய்திருந்தது. (இணைப்பு 12)

இது தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு காண்பிக்கப்பட்டுள்ளன.

(அ) பிற்கொடுப்பனவு முறையின் கீழ் அரிசி கொள்வனவு செய்யப்படுவதற்காக உரிய பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படாததுடன் சகல சந்தர்ப்பங்களின் போதும் அதாவது 21 சந்தர்ப்பங்களிலும் “தலைவரால் அரிசி இறக்குமதி செய்யப்படுவதற்கான

அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டமைக்கு” பிரதி பொது முகாமையாளர் (கொள்வனவு) ஆல் முன் விலைக் கூற்றில் (Pro-forma Invoice) ஓர் குறிப்பு இடப்பட்டிருந்தது. எடுத்தக்காட்டுகள் (இணைப்பு 13) இல் காண்பிக்கப்பட்டுள்ளன.

(ஆ) மேலே 5.1 (ஆ) இல் குறிப்பிடப்பட்டவாறு இவ் 07 வழங்குனர்கள் தேர்ந்தெடுக்கப்படுகையிலும் அரசாங்க கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் விதிமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. ((இணைப்பு 10)

(இ) மேலே 5.1 (இ) இல் குறிப்பிடப்பட்டவாறு ரூபா 1,851,055,933 தொகையான மேற்குறித்த இறக்குமதியை மேற்கொள்கையில் லங்கா சதொச வினால் 07 வழங்குனர்களுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ((இணைப்பு 11)

(ஈ) அவ்வாறு கொள்வனவு நடைமுறை ஒன்று பின்பற்றப்பட்டிராமையால் 2014 ஏப்ரல் 10 ஆம் திகதி முதல் 2014 திசெம்பர் 29 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது அரிசி இறக்குமதி செய்யப்பட்டிருந்த 21 சந்தர்ப்பங்களின் போது 01 மெ.தொ. பல்வேறு விலைக் கூறல்களின் கீழ் கொள்வனவு செய்யப்படுவதற்கு நேர்ந்திருந்தது. (இணைப்பு 12)

(i) 12 சந்தர்ப்பங்களின் போது பொன்னி சம்பா அரிசி 14,739 மெ. தொ. கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவ் அரிசி 01 மெ.தொ. இன் விலை ஐ.அமெ.டொ. 440 முதல் ஐ.அமெ.டொ. 535 வரையாக அதாவது 01 கிலோ அரிசியின் விலையில் ரூபா 58.08 முதல் ரூபா 70.62 வரையான விலை வீச்சு நிலவியது.

(ii) 09 சந்தர்ப்பங்களின் போது நாடு அரிசி 14,523 மெ. தொ. கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவ் அரிசி 01 மெ.தொ. இன் விலை ஐ.அமெ.டொ. 385 முதல் ஐ.அமெ.டொ. 460 வரையாக அதாவது 01 கிலோ அரிசியின் விலையில் ரூபா 50.82 முதல் ரூபா 60.72 வரையான விலை வீச்சு நிலவியது.

**5.3 2014 யூலை 31 ஆம் திகதிய 14/0940/540/005 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்தில் 50,000 மெ.தொ. அரிசி இறக்குமதி செய்யப்பட்டமை**

“ உணவின் பாதுகாப்பு மற்றும் சந்தையில் அரிசியின் விலையை நிலையாக வைத்திருப்பதற்காக பாதுகாப்பு இருப்பு ஒன்றைப் பேணுவதற்கு” தேவை எனக் குறிப்பிட்டு அப்போதைய கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வாணிப அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2014 யூலை 09 ஆம் திகதிய 14/0940/540/005 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் பின்வரும் தீர்மானத்திற்காக அமைச்சரவை அங்கீகாரம் கோரப்பட்டிருந்தது. (இணைப்பு 14)

(i) கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் (CWE) மூலம் 50,000 மெ.தொ. அரிசி இறக்குமதி செய்யப்படுதல்.

(ii) இவ் அரிசி இருப்பு, உணவுத் திணைக்களத்திடம் காணப்பட்ட களஞ்சிய முறைமையைப் பயன்படுத்தி பாதுகாப்பு இருப்பாக ஆறு மாதங்களிற்கு ஒரு தடவை புதுப்பிக்கப்பட்டு பாதுகாப்பாக வைத்துக்கொள்ளப்பட்டிருந்தமை.

(iii) இதற்கான கிரயம் திறைசேரியின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டமை.

அவ் அமைச்சரவை விஞ்ஞாபனத் தீர்மானத்திற்காக 2014 யூலை 31 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் போது பின்வருமாறு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. (இணைப்பு 15)

(i) லக் சதொச இன் மூலம் 5000 மெ.தொ. அரிசி அளவிலான பகுதியாக இறக்குமதி செய்யப்பட்டு அவ் விற்பனை நிலையத் தொகுதியினூடாக அவை விற்பனை செய்யப்படுவதற்கு செயற்படுதல்.

(ii) நவம்பர் முதல் சனவரி வரையான விழாக்காலத்தில் சந்தையில் அரிசி விலையை நிலையாகப் பேணுவதற்காக, தேவைப்படின் சந்தைக்கு விநியோகிப்பதற்காக உணவு ஆணையாளர் திணைக்களத்தின் களஞ்சிய வசதிகளைப் பயன்படுத்தி 02 மாத காலத்திற்காக பாதுகாக்கப்பட்ட அரிசி இருப்பொன்றைப் பேணுதல்.

(iii) லக் சதொச நிறுவகத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட குறுங்காலக் கடன் எல்லையில் இதற்குத் தேவையான நிதியத்தை நிர்வகித்துக்கொள்ளல்.

இதன் படி, 2014 செப்தெம்பர் 01 ஆம் திகதி மக்கள் வங்கியினூடாக திறந்து வைக்கப்பட்ட 42002140024186 ஆம் இலக்க நாணயக் கடிதத்தின் மூலம் United Foods Ltd. எனும் பெயரிலான இந்தியக் கம்பனி ஒன்றின் மூலம் 50,000 மெ.தொ. வெள்ளை அரிசி கட்டளையிடப்பட்டிருந்ததுடன் ரூபா 2,843,606,997 ஆன 50,002 மெ.தொ. 2014 செப்தெம்பர் 14 ஆம் திகதி முதல் 2014 நவம்பர் 16 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது பெறப்பட்டிருந்தது. (இணைப்பு 16, 17 மற்றும் 18)

இது தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் அமைச்சரவை அங்கீகாரம் தொடர்பான ஆய்வின் போது பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(i) இறக்குமதி செய்யப்பட வேண்டிய அரிசி வகையைக் குறிப்பாகக் குறிப்பிடப்பட்டிராமை.

(ii) 2 மாத காலத்திற்குத் தேவையான பாதுகாக்கப்பட்ட அரிசி இருப்பு நிர்ணயிக்கப்பட்டிராமை.

(iii) கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் மூலம் (CWE) அரிசி இறக்குமதி செய்யப்படுவதற்காக கோரப்பட்டிருந்த போதிலும், லக் சதொச வின் மூலம் அரிசி இறக்குமதி செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்தமை.

(ஆ) 5000 மெ.தொ. அரிசி அளவில் பகுதி அளவில் இறக்குமதி செய்யப்படுவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அவ் அங்கீகாரத்திற்கு மாறாக 50,000 மெ.தொ. அளவும் ஒரே தடவையில் கட்டளையிடப்பட்டிருந்தது. இதன் படி, இவ் அரிசி இருப்பு 2014 செப்தெம்பர் 17 ஆம் திகதி முதல் 2014 நவம்பர் 16 ஆம் திகதி வரை 60 நாட்களான குறுகிய காலத்தில் பெறப்பட்டிருந்தன. (இணைப்பு 18)

(இ) உணவு ஆணையாளர் திணைக்களத்தின் களஞ்சியத்தைப் பயன்படுத்தி பாதுகாப்பான அரிசி இருப்பைப் பேணுவதற்காகவே அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும், அமைச்சரவை அங்கீகாரத்தின் படி, 5,000 மெ.தொ. படி இறக்குமதி செய்யப்படாது ஒரே தடவையில் 50,000 மெ.தொ. இறக்குமதி செய்யப்பட்டிருந்தமையால் இவ் அரிசி இருப்பு களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு உணவுத் திணைக்களத்தின் களஞ்சியங்களுக்கு மேலதிகமாக ஏகல பகுதியில் உள்ள தனியார் பிரிவின் களஞ்சியம் ஒன்றும் பயன்படுத்தப்பட நேர்ந்திருந்தது.

(ஈ) மேலே 5.1 (ஆ) இல் குறிப்பிடப்பட்டவாறு இவ் வழங்குனர்கள் தேர்ந்தெடுக்கப்படுகையில் அரசாங்க கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் விதிமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. (இணைப்பு 10)

(உ) மேலே 5.1 (இ) இல் குறிப்பிடப்பட்டவாறு ரூபா 2,843,606,997 தொகையான மேற்குறித்த அரிசி இறக்குமதி செய்கையில் லங்கா சதொச நிறுவகத்தால் வழங்குனருடன் ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. (இணைப்பு 11)

(ஊ) **“மேற்குறித்த வழங்குனர் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வணிக அமைச்சின் மூலம் பெயரிடப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டிருந்ததாக”** தலைவரால் 2015 பெப்ரவரி 20 ஆம் திகதிய இலக்கமிடப்படாத கடிதத்தின் மூலம் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. (இணைப்பு 19)

(எ) உள்நாட்டில் பாரியளவில் சம்பா மற்றும் நாடு அரிசி நுகரப்படுகின்ற நிலையில், இறக்குமதி செய்யப்பட வேண்டிய அரிசி வகையாக வெள்ளை அரிசி தேர்ந்தெடுக்கப்படுவதற்கு சந்தை ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டதா என்பது குறித்து சான்றுகள் இருக்கவில்லை.

(ஏ) அமைச்சரவை விஞ்ஞாபனத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட சந்தையின் அரிசி விலையை நிலையாக வைத்திருத்தல், தட்டுப்பாடின்றி அரிசியை விநியோகித்தல், அவசரமான சந்தர்ப்பத்தின் போது பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளக் கூடிய வகையில் பாதுகாப்பு இருப்பு ஒன்றைப் பேணுதல் போன்ற நோக்கங்களை எய்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும்,

50,000 மெ.தொ. வெள்ளை அரிசி இறக்குமதி செய்ததன் மூலம் அந் நோக்கம் எய்தப்பட்டமை குறித்து உறுதிப்படுத்துவதற்கு உரிய சான்றுகள் இருக்கவில்லை.

(ஐ) இவ் அரிசி இருப்பை இறக்குமதி செய்வதற்காக நாணயக் கடிதம் ஆரம்பிக்கப்பட்டிருந்த 2014 செப்தெம்பர் 01 ஆம் திகதி வரையிலும் லங்கா சதொச நிறுவகத்தால் தமது நிதியத்தைப் பயன்படுத்தி பிற்கொடுப்பனவு முறையிலும் (Documents Against Payment) பொன்னி சம்பா மற்றும் நாடு அரிசி 13,300 மெ.தொ. கட்டளையிடப்பட்டு அவ் அரிசி இருப்பில் 3,349 மெ.தொ கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், இது தொடர்பாக, அமைச்சரவை அங்கீகாரத்தில் 50,000 மெ.தொ அரிசி இறக்குமதி செய்யப்படுவதற்கு நாணயக் கடிதம் ஆரம்பிக்கப்படுகையில் கவனம் செலுத்தப்பட்டமைக்கான சான்றுகள் இருக்கவில்லை. (இணைப்பு 20 மற்றும் 21)

**(ஒ) கூட்டுறவு மற்றும் உள்ளக வாணிப அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த** 14/0940/540/005 ஆம் இலக்க 2014 யூலை 09 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக நிதி, திட்டமிடல் அமைச்சராலும் நிர்மாணங்கள், பொறியியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சரால் மேற்குறித்த அரிசி இறக்குமதியை அதைரியப்படுத்துவதற்காக பின்வரும் அவதானிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. (இணைப்பு 22 மற்றும் 23)

(i) நிதி, திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்பு

---

i. உள்நாட்டுச் சந்தையில் ஏற்படக்கூடிய அரிசித் தட்டுப்பாட்டைக் கருத்திற்கொண்டு 2014 ஏப்ரல் 09 ஆம் திகதிய 1857/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் அரிசிக்காக நிலவிய விசேட சந்தைப் பொருள் வரி அகற்றப்பட்டிருந்தமையால் தனியார் பிரிவின் அரிசி இறக்குமதியால் இது வரையில் அரிசி இறக்குமதி செய்யப்படுவதனால் உள்நாட்டு சந்தை அரிசியின் விலை ஸ்திரப்படுத்தப்பட்டது.

ii. 50,000 மெ.தொ. அரிசி ஒரே தடவையில் இறக்குமதி செய்யப்படின் வெளிநாட்டுச் சந்தையில் அரிசி வழங்கல் விலை உயர்வடையும் போக்கு உள்ளமை.

(ii) நிர்மாணங்கள், பொறியியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சரின் அவதானிப்பு

i. பாதுகாப்பாக அரிசி களஞ்சியப்படுத்தப்படுவதற்காக தற்போது வசதிகள் இன்மையால் அரிசி இருப்பு பாரிய அளவில் விலங்கின உணவிற்காக விற்பனை செய்யப்பட நேர்ந்துள்ளதாக.

ii. 50000 மெ.தொ. இறக்குமதி செய்யப்படுதல், நீண்ட காலமாக களஞ்சியப்படுவதன் மூலம் அரசாங்கத்திற்கு நிதிசார் நட்டம் ஏற்படுவதாக.

iii. விதிக்கப்பட்ட வரி குறைக்கப்பட்டு, சுதந்திரமாக அரிசி இறக்குமதி செய்யப்படுவதற்கு இடமளிக்கப்பட்டதை அடுத்து 120,000 மெ.தொ. அளவில் அரிசி இருப்பு தனியார் துறை இறக்குமதி செய்துள்ளமையும் இறக்குமதி செய்யும் போக்கின் படி, நவம்பர் மாதம் வரை இறக்குமதி மேலும் அதிகரிக்கக் கூடும் என.

iv. அக்கரைப்பற்று போன்ற பிரதேசங்களில் சிறு போக அறுவடை ஆரம்பிக்கப்பட்டிருந்தமையால் அரிசி இறக்குமதி செய்யப்பட்டதன் காரணமாக நெல் விலை வீழ்ச்சியுற்று விவசாயிகள் அழுத்தத்திற்கு உட்படக்கூடும் என.

## 5.4 42002140026193 ஆம் இலக்க நாணயக் கடிதத்தின் மூலம் 1040 மெ.தொ. நாடு அரிசி இறக்குமதி செய்தல்

லங்கா சதொச நிறுவகம் தமது நிதியைப் பயன்படுத்தி 2014 செப்தெம்பர் 22 ஆம் திகதி மக்கள் வங்கியின் மூலம் 42002140026193 ஆம் இலக்க நாணயக் கடிதம் ஒன்று ஆரம்பித்து ரூபா 62,634,808 தொகையான 1040 மெ.தொ. நாடு அரிசி Omwishkar Exports எனும் பெயரிலான இந்தியக் கம்பனி ஒன்றின் மூலம் இறக்குமதி செய்திருந்தது. இவ் அரிசி இருப்பு 2014 ஒக்டோபர் 23 ஆம் திகதி முற்றாக லங்கா சதொச நிறுவகத்திற்குக் கிடைக்கப்பெற்றிருந்தது. (இணைப்பு 24 மற்றும் 25)

இது தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) மேலே 5.1 (ஆ) இல் குறிப்பிடப்பட்டவாறு இவ் வழங்குனர்கள் தேர்ந்தெடுக்கப்படுகையில் அரசாங்க கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் விதிமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. (இணைப்பு 10)

(ஆ) மேலே 5.1 (இ) இல் குறிப்பிடப்பட்டவாறு ரூபா 62,634,808 தொகையான மேற்குறித்த அரிசி இறக்குமதி செய்யப்படுகையில் லங்கா சதொச வினால் வழங்குனர்களுடன் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. (இணைப்பு 11)

(இ) 2014 செப்தெம்பர் 22 ஆம் திகதி வரையிலும் லங்கா சதொச நிறுவகம் தனது நிதியைப் பயன்படுத்தி பிற்கொடுப்பனவு முறையின் கீழும் அமைச்சரவை அங்கீகாரத்திலும் 64,800 மெ.தொ. கூட்டுத்தொகையான அரிசி இருப்பு கட்டளையிடப்பட்டிருக்கையில் அது தொடர்பாகக் கருத்திற்கொள்ளாது மேலும் நாடு அரிசி 1000 மெ.தொன் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. (இணைப்பு 20)

## 5.5 BTD -M 63519 ஆம் BTD- M 63537 ஆம் இலக்க நாணயக் கடிதத்தின் மூலம் 90,901 மெ.தொ. அரிசி இறக்குமதி செய்யப்பட்டிருந்தமை

50,000 மெ.தொ பொன்னி சம்பா அரிசியும் 50,000 மெ.தொ நாடு அரிசியும் விநியோகிப்பதற்கு ACP Industries Ltd எனும் பெயரிலான இந்தியக் கம்பனி இணங்கியுள்ளதாகவும், அவ் அரிசியை இறக்குமதி செய்வதற்காக உடனடியாக நடவடிக்கை எடுக்கும் படியும், இதற்குத் தேவையான வங்கி வசதிகள் இலங்கை வங்கியினூடாக ஏற்பாடு செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும், திறைசேரியின் பிரதிச் செயலாளரால் DFD/RICE/LS-2014 ஆம் இலக்க 2014 ஒக்டோபர் 15 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் லங்கா சதொச தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இதன் படி, இவ் அரிசியை இறக்குமதி செய்வதற்காக இலங்கை வங்கியினூடாக BTD-M 63519 ஆம் BTD-M 63537 ஆம் இலக்க 02 நாணயக் கடிதங்கள் ஆரம்பிக்கப்படுவதற்குத் தேவையான வசதிகள் நிதி, திட்டமிடல் அமைச்சால் வழங்கப்பட்டிருந்தது. (இணைப்பு 26, 27 மற்றும் 28)

இது தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) 100,000 மெ.தொ. அரிசி வழங்கப்படுவதற்கான இணக்கப்பாட்டைத் தெரிவித்து ACP Industries Ltd எனும் பெயரிலான இந்தியக் கம்பனியால் 2014 செப்தெம்பர் 01 ஆம் திகதிய ACP/201314/oct/Export/002 ஆம் இலக்க கடிதம் ஒன்று அப்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு நேரடியாக அமைச்சர் ஒருவருக்கு அத்தகைய விருப்புத் தெரிவிக்கப்பட்ட கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்படுவதற்குக் காரணமான விடயங்கள் எதுவும் கண்டறியப்பட்டிருக்கவில்லை. (இணைப்பு 29)

(ஆ) பொதுத் திறைசேரியின் பிரதிச் செயலாளரால் 2014 ஒக்டோபர் 15 ஆம் திகதிய DFD/RICE/LS-2014 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் 100,000 மெ.தொ. அரிசி ACP Industries Ltd. கம்பனியிலிருந்து கொள்வனவு செய்யப்படுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு லங்கா சதொச தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. (இணைப்பு 26)

(இ) அவ்வாறு அரிசியைக் கொள்வனவு செய்யுமாறு 2014 ஒக்டோபர் 15 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் தலைவருக்கு அறிவித்திருக்கையில், இதற்கு 02 நாட்களின் பின்னர் அதாவது 2014 ஒக்டோபர் 17 ஆம் திகதி திறைசேரிப் பிரதிச் செயலாளரால் பொன்னி சம்பா அரிசி 01 மெ.தொ. 488 அமெ. டொ. களிற்கும் 01 மெ.தொ. நாடு அரிசி 408 அமெ.டொ. களிற்கும் கூட்டுத்தொகை 100,000 மெ.தொ.) கொள்வனவு செய்யப்படுவதற்கு அவரது 2014 ஒக்டோபர் 17 ஆம் திகதிய DFD/Rice/LS/In/Acp ஆம் இலக்க கடிதத்தின் மூலம் ACP Industries Ltd எனும் இந்தியக் கம்பனிக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. (இணைப்பு 30)

(ஈ) 100,000 மெ.தொ. அரிசியை உடனடியாகக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்குமாறு திறைசேரிப் பிரதிச் செயலாளரின் 2014 ஒக்டோபர் 15 ஆம் திகதிய கடிதத்தின் மூலமான அறிவிப்பு 2014 ஒக்டோபர் 19 ஆம் திகதி லங்கா சதொச நிறுவகத்தின் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் இதற்கு 02 நாட்களின் முன்னரான 2014 ஒக்டோபர் 17 ஆம் திகதி அவ் அரிசி இருப்பு திறைசேரியின் பிரதிச் செயலாளரால் கட்டளையிடப்பட்டிருந்தது. (இணைப்பு 31)

(உ) மேலே 5.1 (ஆ) இல் குறிப்பிடப்பட்டவாறு இவ் வழங்குனர்கள் தேர்ந்தெடுக்கப்படுகையிலும் அரசாங்க கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் விதிமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. (இணைப்பு 10)

(ஊ) மேலே 5.1 (இ) இல் குறிப்பிடப்பட்டவாறு ரூபா 5,953,745,103 தொகையான மேற்குறித்த அரிசி இறக்குமதி செய்யப்படுகையில் லங்கா சதொச நிறுவகத்தால் வழங்குனருடன் ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது. (இணைப்பு 11)

(எ) "அரிசி இறக்குமதி செய்த ACP Industries Ltd. எனும் பெயரிலான இந்தியக் கம்பனி திறைசேரியாலேயே பெயரிடப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டிருந்ததாகவும், லங்கா சதொச நிறுவகத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த இறக்குமதி நடவடிக்கைகளுக்காக அமைச்சு கொள்வனவுக் குழுவையோ அல்லது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவையோ நியமித்திருக்கவில்லை எனவும்" கைத்தொழில் மற்றும்

வணிக அமைச்சின் செயலாளரால் 2015 மார்ச் 11 ஆம் திகதிய CIT/6/8/Import/Rice ஆம் இலக்க கடிதத்தின் மூலம் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. (இணைப்பு 32)

(ஏ) 2014 ஒக்டோபர் 15 ஆம் திகதி வரையில் லங்கா சதொச நிறுவகம் தமது நிதியைப் பயன்படுத்தியும் அமைச்சரவை அங்கீகாரத்தில் 91,210 மெ.தொ. அரிசியைக் கட்டளையிடப்பட்டிருக்கையில் திறைசேரிப் பிரதிச் செயலாளரால், லங்கா சதொச தலைவருக்கு 100,000 மெ.தொ. அரிசி அளவை இறக்குமதி செய்வதற்கான அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு கட்டளையிடப்பட்டிருந்த அரிசி இருப்பில் 57,086 மெ.தொ. மேற்குறித்த அரிசி இறக்குமதிக்கான 02 நாணயக் கடிதங்கள் ஆரம்பிக்கப்பட்டு 2014 ஒக்டோபர் 29 ஆம் 30 ஆம் திகதி வரையிலும் கிடைக்கப்பெற்றிருந்தன. (இணைப்பு 20 மற்றும் 21)

(ஐ) திறைசேரிப் பிரதிச் செயலாளரால், அரிசி கட்டளையிடப்பட்ட 2014 ஒக்டோபர் 17 ஆம் திகதிய கடிதத்தில் சகல அரிசி இருப்பும் (100,000 மெ.தொ) 2014 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு இந்தியக் கம்பனிக்கு அறிவித்திருந்த போதிலும் ஆரம்பிக்கப்பட்டிருந்த நாணயக் கடிதங்கள் 2015 பெப்ரவரி 20 ஆம் திகதி காலாவதியாகும் வரையிலும் 4,926 மெ.தொ. பொன்னி சம்பா அரிசியும் 4,887 மெ.தொ. நாடு அரிசியும் மாத்திரமாகும். (இணைப்பு 30 மற்றும் 33)

(ஒ) மேற்குறித்த நாணயக் கடிதங்களின் காலவதிக்கு முன்னர் கப்பலில் ஏற்றப்பட முடியாது போன எஞ்சிய அரிசி இருப்பு மீள கப்பலில் ஏற்றப்படுவதற்காகவும் நாணயக் கடிமங்களின் காலத்தை மேலும் நீடித்துத் தருமாறு இந்தியக் கம்பனியால் 2015 பெப்ரவரி 09 ஆம் திகதிய ACP/Export/2015/2/011 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் லங்கா சதொச தலைவருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. (இணைப்பு 34)

(ஓ) இறக்குமதி செய்யப்பட்ட அரிசி இருப்பின் நிலை தொடர்பாக கலந்துரையாடப்படுவதற்காக 2015 பெப்ரவரி 12 ஆம் திகதி கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற

கூட்டத்தின் போது 2015 பெப்ரவரி 20 ஆம் திகதி காலாவதியான 02 நாணயக் கடிதங்கள் மீள திருத்தப்பட்டு, கடன்பத்திரங்களின் எஞ்சிய பெறுமதிக்காக பொன்னி சம்பா அரிசி இறக்குமதி செய்யப்படுவதற்கும், அதற்கமைய நாணயக் கடிதத்தைத் திருத்துவதற்கும், இது தொடர்பாக திறைசேரியை அறிவுறுத்துவதற்கும் அமைச்சரால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், இது வரையில் பெரும் போகத்தின் நெல் விளைச்சல் சந்தைக்குக் கிடைக்கப்பெற்றுக் கொண்டிருந்தமை, லங்கா சதொச களஞ்சியங்களில் நிலவிய அரிசி இருப்பு மற்றும் தனியார் துறையில் நிலவிய அரிசி இருப்பு போன்ற விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. (இணைப்பு 35)

(ஔ) இது தொடர்பாக, பொதுத் திறைசேரியை அறிவுறுத்துமாறு அமைச்சர் அறிவுறுத்தியிருந்த போதிலும், இதற்கு முரணாக எவ்வித அங்கீகாரமும் இன்றி மறுநாளே அதாவது 2015 பெப்ரவரி 13 ஆம் திகதிய இலக்கமிடப்படாத கடிதத்தின் மூலம் லங்கா சதொச நிறுவகத்தின் பணிப்பாளரினதும் பிரதிப் பொது முகாமையாளரினதும் (நிதி) கையொப்பத்துடனான நாணயக் கடிதங்களின் காலம் 2015 ஏப்ரல் 20 ஆம் திகதி வரை நீடிக்குமாறு இலங்கை வங்கிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அக் கடிதத்திற்கு, பணிப்பாளராக அது வரையில் அமைச்சின் மேலதிகச் செயலாளராகச் செயற்பட்டவரே கையொப்பமிட்டிருந்தார். இதன் படி, இவ் உத்தியோகத்தருக்கு நாணயக் கடிதம் நீடிக்கப்படுவதற்கு இருந்த அதிகாரப் பொறுப்பு என்ன என்பது தெளிவாகியிருக்கவில்லை. (இணைப்பு 36)

(க) 2014/15 பெரும் போகத்தின் நெல் விளைச்சல் சந்தைக்கு கிடைக்கப்பெறுவதால் காலாவதியான நாணயக் கடிதங்களின் காலம் மேலும் நீடிக்கப்படலாகாது என 2015 பெப்ரவரி 25 ஆம் திகதிய DFD/RICE/LS-2014 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் திறைசேரிப் பிரதி செயலாளரால் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சுச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அது வரையிலும் அதாவது 2015 பெப்ரவரி 20 ஆம் திகதி இலங்கை வங்கி 5,361,911,463 கூட்டுத்தொகையான 02 நாணயக் கடிதங்களின் காலம் 2015 ஏப்ரல் 17 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. (இணைப்பு 37, 38 மற்றும் 39)

(கா) 02 கடன் பத்திரங்களின் பிணை 2015 யூலை 31 ஆம் திகதி வரை நீடிக்குமாறு இலங்கை வங்கியின் பிரதிப் பொது முகாமையாளரால் 2015 மார்ச் 04 ஆம் திகதிய இலக்கம் இடப்படாத கடிதத்தின் மூலம் திறைசேரியின் பிரதிச் செயலாளரிடம் கோரப்பட்டிருந்த போதிலும், “பெரும் போகத்தின் அறுவடை பெறப்பட்டுக் கொண்டு இருப்பதனாலும், சந்தையில் அரிசியின் இருப்பு நிலவுவதாலும், அக் நாணயக் கடிதங்களின் பிணை நீடிக்கப்படலாகாது என திறைசேரியின் செயலாளர் அறிவுறுத்தல்கள் வழங்கியிருந்தமையால் முதல் 02 கடன் பத்திரங்களின் செல்லுபடிக் காலம் வரை இறக்குமதி செய்யப்பட்டுள்ள அரிசியின் அளவிற்காக மாத்திரமே பிணை வழங்க முடியும்” என 2015 மார்ச் 17 ஆம் திகதிய DFD/RICE/LS-2014 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் திறைசேரிய பிரதிச் செயலாளரால் வங்கிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு அறிவித்திருந்த போதிலும் அதற்கு 15 நாட்களின் பின்னர் அதாவது 2015 ஏப்ரல் 01 ஆம் திகதிய DFD/RICE/LS – 2014 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் “நிதி அமைச்சரால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாக” குறிப்பிட்டு முதல் வழங்கப்பட்ட நாணயக் கடிதங்களின் பிணைக் காலம் 2015 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை செல்லுபடியானமையால் 2015 மார்ச் 17 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தை அகற்றுமாறும் திறைசேரியின் பிரதிச் செயலாளர் அறிவித்திருந்தார். (இணைப்பு 40, 41 மற்றும் 42)

(கி) 2014 நவம்பர் 05 ஆம் திகதிய முதல் நாணயக் கடிதங்களில் 46 ஏ (8) ஆம் பிரிவில் “லங்கா சதொச நிறுவகத்தின் மூலம் பெயரிடப்பட்ட பிரமுகர் ஒருவரால் அரிசியின் நிலை, அளவு மற்றும் பொதி குறித்த நியமங்களிற்கு இணக்குகின்றனவா என உறுதிப்படுத்தியதைத் தொடர்ந்து செலுத்தப்பட வேண்டிதாக” **Quality certificate issued by Representative of the Applicant certifying that quality, quantity and packing conform to the specifications stated under field 45A of the Letter of Credit. The name of the Representative and his passport number will be notified to the advising Bank in due course)** குறிப்பிடப்பட்டிருந்த நிபந்தனை பின்னர் அதாவது 2014 நவம்பர் 18 ஆம் திகதி மீள திருத்தப்பட்டு “மெ.தொ.5,000 வரை **SGS India**

**(Pvt) Ltd** எனும் பெயருடைய இந்திய நிறுவகத்தால் சமர்ப்பிக்கப்பட்ட தரச் சான்றிதழில்" **(Should be amended to read as Quality Certificate up to 5000 MT of Ponni Samba (GRII) with 5 pct broken issued by SGS India (Pvt) Ltd, India certifying that quality, quantity and packing conform to specification stated under field 45A of Letter of Credit)** கொடுப்பனவு நிபந்தனை உள்ளடக்கப்பட்டிருந்தது.

அந் நிபந்தனையும், லங்கா சதொச நிறுவகத்தின் பணிப்பாளர் சபையின் பணிப்பாளரினதும் பிரதிப் பொது முகாமையாளரினதும் (நிதி) கையொப்பத்துடன் நாணயக் கடிதம் நீடிக்கப்படுவதற்காக அனுப்பிவைக்கப்பட்டிருந்த 2015 பெப்ரவரி 13 ஆம் திகதிய இலக்கமிடப்படாத கடிதத்தின் மூலம் அகற்றப்பட்டு இதற்குப் பதிலாக "வழங்குனரால் (இந்தியக் கம்பனி) சுயாதீன நிறுவகம் ஒன்றினால் அரிசி தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நியமக் கடிதத்தின் படி கொடுப்பனவு செய்யப்படுவதற்கு இலங்கை வங்கி ஆலோசனை வழங்கியிருந்தது. " **(Should be deleted and pls include Quality Certificate has been issued by the reputed independent survey at beneficiary cost and conforms to the specifications stated under field 45A of the Letter of Credit)** (இணைப்பு 27, 28, 43 மற்றும் 44)

(கீ) மேற்குறித்த 02 கடன் பத்திரங்களின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டிருந்த அரிசி அகற்றப்படுவதற்கு உரித்தான மொத்தம் 169 கோவைகளில் 60 கோவைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது அவ் 09 கோவைகளில் தரச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையும், மேலும் 02 கோவைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த தரச் சான்றிதழ்கள் அவ் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி இருப்பிற்கு உரித்தற்ற தரச் சான்றிதழ்கள் என்பதுவும் கண்டறியப்பட்டது. (இணைப்பு 45)

(கு) ACP Industries Ltd எனும் பெயரிலான இந்தியக் கம்பனியால் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருக்கு அனுப்பிவைக்கப்பட்ட 2014 செப்தெம்பர் 01 ஆம் திகதிய ACP/201314/OCT /EXPORTS/002

ஆம் இலக்க கடிதத்தில் “கம்பனிக்கு உரித்தான விளைச்சல் நிலங்களில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசி விநியோகிப்பதாக” வெளிப்படுத்தியிருந்த போதிலும், அத் திகதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட மேற்குறித்த 60 கோவைகளிலும் அக் கம்பனிக்குப் பதிலாக வேறு கம்பனிகளால் அரிசி விநியோகிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. (இணைப்பு 29 மற்றும் 46)

(கூ) திறைசேரி பிரதி செயலாளரால் 2014 ஒக்டோபர் 31 ஆம் திகதிய TO/REV/LC/443 ஆம் இலக்க திறைசேரிப் பிணைக் கடிதத்தின் மூலம் “இரத்துச் செய்யப்பட முடியாத (Irrevocable) கடன் பத்திரம் ஒன்று ஆரம்பிக்குமாறு” இலங்கை வங்கிக்கு வழங்கியிருந்த அறிவுறுத்தலுக்கு முரணாக ACP Industries Ltd. எனும் பெயரிலான வழங்குனரின் ACP/201314/OCT/EXPORT/009 ஆம் இலக்க 2014 ஒக்டோபர் 14 ஆம் திகதிய முன்விலைக்கூற்றில் (Pro - forma Invoice) குறிப்பிடப்பட்டவாறு “வேறு தரப்பினருக்கு ஒப்படைக்கக் கூடிய” **(Irrevocable Transferable)** ஆக லங்கா சதொச நிறுவகத்தால் நாணயக் கடிதம் ஆரம்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் ACP Industries Ltd. நிறுவகம் இடைத்தரகராகச் செயற்பட்டு வேறு கம்பனிகளின் மூலம் அரிசி வழங்கப்படுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியிருந்தது. (இணைப்பு 47 மற்றும் 48)

(கெ) இவ் அறிக்கையின் 5.3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட 50,000 மெ.தொ. அரிசி இறக்குமதி செய்யப்படுவதற்காக வழங்கப்பட்டிருந்த 2014 யூலை 31 ஆம் திகதிய 14/0940/540/005 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் லங்கா சதொச நிறுவகம் 50,000 மெ.தொ. வெள்ளை அரிசியை கட்டளையிட்டு 2014 ஒக்டோபர் 29 ஆம் திகதி வரையில் இதில் 36,399 மெ.தொ. அரிசி கிடைக்கப்பெற்றிருக்கையில், கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வாணிப அமைச்சின் செயலாளரால் நிதி, திட்டமிடல் செயலாளரிற்கு அனுப்பிவைக்கப்பட்ட 2014 ஒக்டோபர் 23 ஆம் திகதிய CIT/5/6/සහල් ආනයනය ஆம் இலக்கக் கடிதத்தின் மூலம் மீள அவ் அமைச்சரவை அங்கீகாரம் குறிப்பிடப்பட்டு மேற்குறித்த 100,000 மெ.தொ. அரிசி இறக்குமதி செய்யப்படுவதற்கான 45 மில்லியன் ஐ.அமெ.டொ. கடன் தொகை லங்கா சதொச விற்கு வழங்கப்படுவதற்குத் தேவையான

வசதிகள் ஏற்படுத்தித் தருமாறும் அறிவிக்கப்பட்டிருந்தமை பிரச்சனைக்குரிய விடயமாயிற்று. (இணைப்பு 15, 21 மற்றும் 49)

(கே) அரிசி அடங்கிய கொள்கலன்கள் துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்படுவதற்காக நீண்ட காலம் கடந்திருந்தது.

(i) நாணயக் கடிதங்கள் ஆரம்பிக்கப்பட்ட ஆரம் சந்தர்ப்பத்தின் போதும் அரிசி இருப்பை விரைவாக அகற்றுவதற்காக "இறக்குமதி செய்யப்பட்ட அரிசி இருப்பு ஆய்விற்கு உட்படுத்தப்படாது விடுவிக்கப்படும் வசதி **Green Channel Facility)** ஏற்படுத்திக் கொடுக்குமாறு" அபிவிருத்தி நிதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் 2014 நவம்பர் 13 ஆம் திகதிய DFD/RICE/LS–2014 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திடம் கோரியிருந்த போதிலும் BTD-M 63519 ஆம் BTD-M 63537 ஆம் இலக்க நாணயக் கடிதங்களின் மூலம் இறக்குமதி செய்யப்பட்டிருந்த மொத்த அரிசியின் அளவான 90,901 மெ.தொ. இல் 42,992 மெ.தொ. அரிசி அதாவது 47.3 இற்கு அண்மித்த அளவிலான ஓர் அளவு துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்படுவதற்காக 04 மாதங்கள் முதல் 10 மாதங்கள் வரையான காலம் கடந்திருந்தது. குறிப்பாக 398 கொள்கலன்களும் 245 கொள்கலன்களும் விடுவிக்கப்படுவதற்காக முறையே 9 மாதங்களும் 10 மாதங்களுமான நீண்ட காலம் கடந்திருந்தன. (இணைப்பு 50 மற்றும் 51)

(ii) பொதுத் திறைசேரியிலும் சதொச நிறுவகத்தின் உத்தியோகத்தர்களைப் போன்று உரிய அமைச்சரின் கோரலின் படி துறைமுக அதிகாரசபையால் தாமதக் கட்டணம் அறவிடப்படாது 60 நாட்கள், சலுகைக் காலம் வழங்கப்பட்டிருந்த போதிலும், கொள்கலன்கள் உடனடியாக விடுவிக்கப்படுவதற்காக லங்கா சதொச நிறுவகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையால் சலுகைக்காலத்தின் பின்னர் 2015 யூன் 24 ஆம் திகதி வரையில் தாமதக் கட்டணமாக (Demurrage) ரூபா 362,058,214 தொகை உள்ளடங்கலாக ரூபா 506,703,785 தொகை லங்கா சதொச நிறுவகத்தால் செலுத்தப்பட வேண்டியுள்ளதாக

துறைமுகங்கள், கப்பற்துறை அமைச்சரால் அமைச்சரவைச் செயலாளருக்கு விலாசமிடப்பட்ட 2015 யூலை 10 ஆம் திகதிய எம்பீஎஸ்/06/15/ 02-04 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அறிவித்திருந்தார். (இணைப்பு 52)

(iii) BTD-M 63519 ஆம் BTD-M 63537 ஆம் இலக்கங்களைக் கொண்ட 02 நாணயக் கடிதங்கள் மீள நீடிக்கப்படுகையில் அது வரையிலும் ஏனைய கடன் பத்திரங்கள் மற்றும் பிற்கொடுப்பனவு முறையின் கீழ் கட்டளையிடப்பட்டிருந்த அரிசியின் அளவு தொடர்பாகவும் அச் சந்தர்ப்பம் வரை தற்போதுள்ள களஞ்சியங்களில் நிலவும் இட வசதி தொடர்பாகவும் எவ்வித கவனமும் செலுத்தப்பட்டிராத காரணத்தால் பெருமளவு அரிசி அளவு சேதமடைவதற்கும் தேவையற்ற நிதி முடக்கலிற்கு உட்படுவதற்கும் லங்கா சதொச நிறுவகத்திற்கு நேர்ந்திருந்தது.

(iv) இவ்வாறே மனித நுகர்விற்காக இறக்குமதி செய்யப்பட்ட அரிசி ஏற்ற சுற்றாடல் நிலையின் கீழ் முறையான நடைமுறைக்கு மாறாக துறைமுக வளாகத்தில் நீண்ட காலமாக இறக்குமதி செய்யப்பட்டிருந்த கொள்கலன்களிலேயே களஞ்சியப் படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த காரணத்தால் அவ் அரிசி இருப்பு சேதமுற்றிருந்தது.

**(கை) துறைமுக வளாகத்தில் விடுவிக்கப்பட்ட அரிசி அடங்கிய 809 கொள்கலன்கள் 02 தனியார் கொள்கலன் பகுதியில் மீள களஞ்சியப்படுத்தப்பட்டு இதற்காக ரூபா 15,638,362 செலுத்தப்பட்டிருந்தது.**

BTD-M 63519 ஆம் BTD-M 63537 ஆம் இலக்க கடன் பத்திரங்களின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி அடங்கிய கொள்கலன்கள் 10 மாதங்ள் அளவிலான காலம் துறைமுக வளாகத்தில் வைத்துக்கொள்ளப்பட்டு விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அக் கொள்கலன்களில் இருந்த அரிசி முறையாக களஞ்சியங்களில் களஞ்சியப்படுவதப்படுவதற்குப் பதிலாக ஏஸ் கொள்கலன் துறை (ACE Container Yard) ஏஷியன் கொள்கலன் துறை (Asian Container

Yard') எனும் துறைகளில் மீள வைத்துக்கொள்ளப்படுவதற்கு லங்கா சதொச நிறுவகம் நடவடிக்கை எடுத்திருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இத் தனியார் கொள்கலன் துறைகள் தற்காலிக கொள்கலன் வைத்துக்கொள்ளப்படும் இடங்களாகப் பேணப்பட்டு வருவதுடன் கொள்கலன்கள் வைத்துக்கொள்ளப்படும் காலத்திற்காக ஓர் கொள்கலனிற்கு நாளொன்றிற்கு ரூபா 150 படி நில வாடகை லங்கா சதொச நிறுவகத்தால் செலுத்த வேண்டியிருந்தது.

(ii) 10 மாத கால அளவில் துறைமுகத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்த கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டதை அடுத்து 2016 சனவரி மாதம் முதல் மேலும் இத் தனியார் கொள்கலன் துறைகளில் வைத்துக்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(iii) லங்கா சதொச நிறுவகத்திடமிருந்தும் கொள்கலன் துறையிடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் படி, 21,034 மெ.தொ. அரிசி அடங்கிய 809 கொள்கலன்கள் இக் கொள்கலன் துறையில் வைத்துக்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அக் கொள்கலன்களில் 727 கொள்கலன்கள் 02 முதல் 10 மாதங்களிற்கு இடைப்பட்ட காலத்தின் பின்னர் கொண்டு செல்லப்படுவதற்கு லங்கா சதொச நிறுவகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. (இணைப்பு 53)

(iv) இவ்வாறே 2016 ஒக்டோபர் 14 ஆம் திகதி கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது ACE கொள்கலன் துறையில் 2,152 மெ.தொ. அரிசி அடங்கிய 82 கொள்கலன்கள் மேலும் வைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அக் கொள்கலன்கள், 2016 சனவரி மாதம் அத் தளத்திற்குக் கொண்டுவரப்பட்டவையாகக் காணப்பட்டன. இதன் படி, இக் கொள்கலன்கள் 09 மாதங்களிற்கு மேற்பட்ட காலமாக அத்

தளத்தில் வைத்துக்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிந்தது. (இணைப்பு 54)

(v) அக் கொள்கலன் துறையில் காணப்பட்ட 82 கொள்கலன்களில் 02 கொள்கலன்கள் தெரிவு முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு திறந்து பரீட்சிக்கப்பட்டிருந்ததுடன் அக் கொள்கலன்களிற்குள் நீர் கசிந்திருந்த காரணத்தால் அரிசி பழுதடைந்து மிகவும் துர்நாற்றத்துடனும், புழுக்களும் ஏனைய பூச்சிகளும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. படங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.





(vi) அரிசி போன்ற நுகர்வுப் பொருட்கள் அடங்கிய கொள்கலன்கள் களஞ்சியப்படுத்தப்படுவதற்கு ஏற்ற சுற்றாடல் நிலைமைகள் இத் துறையில் காண முடியாதிருந்ததுடன் நீண்ட காலமாக மழைக்கும் அதிக வெப்பத்திற்கும் உட்பட்டிருந்த காரணத்தால் இக் களஞ்சியப்படுத்தப்பட்ட அரிசி எவ்விதத்திலும் மனித நுகர்விற்கு ஏற்ற நிலையில் இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. குறிப்பாகத் துறைமுக வளாகத்தில் 10 மாதங்களுக்கு அண்மித்த காலமும், தனியார் கொள்கலன் துறையில் மேலும், 09 மாதகாலத்திற்கு அண்மித்த காலமுமாக 19 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக இக் கொள்கலன்கள் முறையற்ற விதத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(vii) சிரேஷ்ட கணக்காளரால் 2016 நவம்பர் 03 ஆம் திகதி கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருந்த தகவல்களின் படி, கொள்கலன்கள் வைத்துக்கொள்ளப்படுவதற்கான நில வாடகையாக ரூபா 15,638,362 தொகையை 2016 செப்தெம்பர் 20 ஆம் திகதி வரையான காலத்திற்கு உரித்தாக கொள்கலன் நிறுவகங்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இவ்வாறே, 2016 நவம்பர் 16 ஆம் திகதி வரையிலும் 54 கொள்கலன்கள் அத் துறையில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்ததன் காரணமாக மேலும், நில வாடகையாகச் செலுத்தப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. (இணைப்பு 55 மற்றும் 56)

**5.6 42002140033274 ஆம் இலக்க மற்றும் 42002140033283 ஆம் இலக்க நாணயக் கடிதங்களின் மூலம் 61,354 மெ.தொ அரிசி இறக்குமதி செய்யப்பட்டமை**

தேர்தல் காலத்தில் (2015 ஆம் ஆண்டின் சனாதிபதி தேர்தல்) அரிசியின் விலை வழமைக்கு மாறாக உயர்வடையும் போக்கை அதைரியப்படுத்தும் உபாயமார்க்கமாக லங்கா சதொச வினூடாக நியாய விலைக்கு அரிசி விநியோகிக்கப்படும் அரசாங்கத்தின் தீர்மானம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதற்காக அப்போதைய கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வாணிப அமைச்சர் 2014 நவம்பர் 28 ஆம் திகதிய இலக்கமிடப்படாத கடிதத்தின் மூலம் திறைசேரிச் செயலாளரால் மேற்கொள்ளப்பட்ட கோரலின் படி, 2014 திசெம்பர் 03 ஆம் திகதி மக்கள் வங்கியின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட 42002140033274 ஆம் இலக்க நாணயக் கடிதத்தின் மூலம் Trident Chempher Ltd எனும் பெயரிலான இந்தியக் கம்பனி ஒன்றின் மூலமும் 42002140033283 ஆம் இலக்க நாணயக் கடிதத்தின் மூலம் United Foods Pvt Ltd எனும் பெயரிலான இந்தியக் கம்பனியின் மூலம் முறையே 30,000 மெ.தொ. வெள்ளை அரிசியும் 31,354 மெ.தொ. ரூபா பொன்னி சம்பா அரிசியும் ரூபா 3,781,156,555 செலவில் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. (இணைப்பு 57, 58, 59, 60 மற்றும் 61)

இது தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) சலுகை விலைக்கு அரிசி விநியோகிக்கப்படுவதற்காக 2014 நவம்பர் 28 ஆம் திகதிய இலக்கம் இடப்படாத கடிதத்தின் மூலம் கூட்டுறவு மற்றும் உள்ளக வாணிப அமைச்சரால் திறைசேரிச் செயலாளரிடம்

பொன்னி சம்பா அரிசியும் நாடு அரிசியும் 50,000 மெ.தொ. படி இறக்குமதி செய்யப்படுவதற்குத் தேவையான நிதி வசதிகளைப் பெற்றுத்தருமாறு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்காக, “ **பொதுத் திறைசேரிச் செயலாளரால் 30,000 மெ.தொ. படி திருத்தப்பட்டதாக**” குறிப்பு ஒன்று அக் கடிதத்திலேயே இடப்பட்டு அபிவிருத்தி நிதி திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் 2014 திசெம்பர் 01 ஆம் திகதிய DFD/RICE/LS-2014 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் 30,000 மெ.தொ. பொன்னி சம்பா அரிசியும் 30,000 மெ.தொ. வெள்ளை அரிசியும் தருவிப்பதற்கு திறைசேரியின் இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் இதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. (இணைப்பு 57 மற்றும் 62)

(ஆ) அவ்வாறு அங்கீகாரம் இல்லத போதிலும் அரிசி இறக்குமதி செய்யப்படுவதற்கான நிதி வசதி லங்கா சதொச நிறுவகத்திற்கு வழங்குமாறு திறைசேரியின் பிரதிச் செயலாளரால் 2014 திசெம்பர் 04 ஆம் திகதிய TO/REV/LC/449 ஆம் இலக்கக் கடிதத்தின் மூலம் மக்கள் வங்கிக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. (இணைப்பு 63)

(இ) மேலே 5.1 (ஆ) இல் குறிப்பிடப்பட்டவாறு Trident Chempher Ltd மற்றும் United Foods (Pvt) Ltd எனும் இந்திய வழங்குனர்கள் தேர்ந்தெடுக்கப்படுகையில் தேசிய கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் விதிமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. (இணைப்பு 10)

(ஈ) மேலே 5.1 (இ) இல் குறிப்பிடப்பட்டவாறு ரூபா 3,781,156,555 தொகையான மேற்குறித்த அரிசி இறக்குமதியின் போது லங்கா சதொச வினால் 02 வழங்குனர்களுடன் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. (இணைப்பு 11)

(உ) மேலே 5.3 (ஊ) இல் குறிப்பிடப்பட்டவாறு மேற்குறித்த வழங்குனர்கள் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வாணிப அமைச்சினால் பெயர் குறிப்பிட்டு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. (இணைப்பு 19)

(ஊ) 2014 திசெம்பர் 03 ஆம் திகதி வரையிலும் லங்கா சதொச நிறுவகம் தனது நிதியைப் பயன்படுத்தி அமைச்சரவை அங்கீகாரமும் திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் 193,460 மெ.தொ. அரிசி

கட்டளையிட்டிருந்த போதிலும் இவ் 60,000 மெ.தொ. அரிசி இறக்குமதி செய்யப்படுவதற்கான நாணயக் கடிதம் ஆரம்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இக் கட்டளையிடப்பட்ட அரிசி அளவில் 78,794 மெ.தொ. 2014 திசெம்பர் 03 ஆம் திகதி வரையிலும் கிடைக்கப்பெற்றிருந்தது. (இணைப்பு 20 மற்றும் 21)

(எ) 2014 செப்தெம்பர் 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட நாணயக்கடிதத்தின் மூலம் கட்டளையிடப்பட்ட 50,000 மெ.தொ. வெள்ளை அரிசி 2014 நவம்பர் 09 ஆம் திகதி வரையில் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் அது குறித்து கருத்திற்கொள்ளப்படாது 2014 திசெம்பர் 03 ஆம் திகதியும் 30,000 மெ.தொ. வெள்ளை அரிசி கட்டளையிடப்பட்டிருந்ததன் காரணமாக 2014 ஆம் ஆண்டின் போது கட்டளையிடப்பட்ட மொத்த வெள்ளை அரிசியின் அளவு 80,000 மெ.தொ. ஆகக் காணப்பட்டது.

**5.7 அரசாங்கம் ஒன்றால் அரசாங்கத்திற்கு வழங்கப்படும் அடிப்படையில் பங்களாதேஷ் அரசாங்கத்திடம் இருந்து 25,000 மெ.தொ. நாடு அரிசி இறக்குமதி செய்யப்படல்.**

உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காக 50,000 மெ.தொ. அரிசியை பங்களாதேஷ் அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளப்படுவதற்காக 2014 நவம்பர் 12 ஆம் திகதிய DFD/CM/2014-03 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்று, நிதி, திட்டமிடல் அமைச்சால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதன் படி, பங்களாதேஷ் அரசாங்கத்துடன் 2014 திசெம்பர் 03 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், 25,000 மெ.தொ. நாடு அரிசி ரூபா 1,504,335,376 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. (இணைப்பு 64 மற்றும் 65).

மேற்குறித்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம், கோரப்பட்டிருந்த பின்வரும் தீர்மானத்திற்காக 2014 நவம்பர் 12 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. (இணைப்பு 66)

(i) ஒரு மெ.தொ. 450 ஐ.அமெ.டொ. படி 50,000 மெ.தொ. அரிசி பங்களாதேஷ் அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளப்படுவதற்காக பங்களாதேஷ் உணவு அமைச்சுடன்

ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்படுவதற்காக வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவகத்திற்கு அதிகாரம் வழங்கப்படுவதற்கு.

(ii) இவ் 50,000 மெ.தொ. அரிசி இறக்குமதி செய்யப்படுவதற்குத் தேவையான நிதி வசதிகள் இலங்கை வங்கியால் வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவகத்திற்கு வழங்கப்படுவதற்கு.

(iii) இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியால் லங்கா சதொச நிறுவகத்திற்கு அரிசி இறக்குமதி செய்யப்படுவதற்காக வழங்கப்பட்ட நிதி வசதிகளுக்காகத் தேவையான வசதிகளை வழங்கும் கடிதத்தை வழங்குவதற்கு பொதுத் திறைசேரிக்கு அதிகாரம் வழங்கப்படுவதற்கு.

இது தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) பங்களாதேஷ் அரசாங்கத்திடம் இருந்து 50,000 மெ.தொ. அரிசி இறக்குமதி செய்யப்படுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும், இதற்கு மாறாக 25,000 மெ.தொ. மாத்திரம் இறக்குமதி செய்யப்பட்டமைக்காக 2014 திசெம்பர் 03 ஆம் திகதி ஓர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இதன் படி, அங்கீகரிக்கப்பட்ட அரிசி அளவைப் பார்க்கிலும், குறைவான அரிசி அளவு இறக்குமதி செய்யப்பட்டமைக்கு காரணமான விடயங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த அங்கீகாரத்தின் தன்மை எத்தகையது என்பது கண்டறியப்பட்டிருக்கவில்லை. (இணைப்பு 65 மற்றும் 66)

(ஆ) 2006 சனவரி 25 ஆம் திகதிய சுற்றறிக்கை தே.கொ.வ. 08 ஆம் இலக்க அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 8.9.3 இன் பிரகாரம் ரூபா 500 மில்லியனிற்குச் சமனான அல்லது இதற்கு மேலான வேலைகள் மற்றும் சேவைகள் வழங்கல் ஒப்பந்தங்களிற்கு உரிய உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படுகையில் வழி அமைச்சின் செயலாளரால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணாக ரூபா 1,504,335,376 பெறுமதியான அரிசி 25,000 மெ.தொ. இறக்குமதி செய்யப்படுவதற்காக பங்களாதேஷ் அரசாங்கத்துடன்

ஏற்படுத்தப்பட்டிருந்த உடன்படிக்கைக்கு லங்கா சதொச வின் தலைவரால் கையொப்பம் இடப்பட்டிருந்தது. (இணைப்பு 11)

(இ) 2014 திசெம்பர் 10 ஆம் திகதி வரையிலும் இலங்கை சதொச நிறுவகம் தமது நிதிப் பயன்பாட்டினால், அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் திறைசேரியின் இணக்கப்பாட்டின் கீழ் 253,460 மெ.தொ. அரிசியை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் இது வரையிலும், அவ் அரிசி இருப்பில் 80,154 மெ.தொ. கிடைத்திருந்தது. எஞ்சிய இருப்பு கிடைக்கப்பெற்றுக்கொண்டிருந்தது. இதன் படி, அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. (இணைப்பு 20 மற்றும் 21)

(ஈ) 2014 செப்தெம்பர் 24 ஆம் திகதி இல. bhc-col/14/230.06 ஆம் இலக்க பங்களாதேஷ் உயர் ஸ்தானிகரின் கடிதத்தின் படி, இவ் அரிசி இருப்பு தொடர்பான தரம், விலை, கொள்வனவு நடைமுறை உள்ளடங்கிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்படுவதற்காக இலங்கையில் இருந்து நிபுணத்துவம் வாய்ந்த ஓர் குழுவிற்கு பங்களாதேஷ் டக்கா தலைநகரிற்கு வருகை தருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக திறைசேரியின் 03 உத்தியோகத்தர்களும் லங்கா சதொச நிறுவகத்தின் தலைவரும் 2014 செப்தெம்பர் 30 ஆம் திகதி முதல் 2014 ஒக்டோபர் 02 ஆம் திகதி வரை கலந்துகொண்டிருந்தனர். (இணைப்பு 67 மற்றும் 68)

(உ) நிபுணத்துவம் வாய்ந்த குழு ஒன்று பங்களாதேஷ் நாட்டிற்கு அனுப்பி வைக்குமாறு அறிவித்திருந்த போதிலும், அரிசியின் தரம் குறித்து நிபுணத்துவம் வாய்ந்த உத்தியோகத்தர் அதில் கலந்துகொண்டமை பற்றி தெளிவற்றிருந்தது.

## 6. இறக்குமதி செய்யப்பட்ட அரிசி எஞ்சிய இருப்பு

லங்கா சதொச நிறுவகத்தால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மற்றும் விற்பனை செய்யப்பட்ட அரிசியின் படி, 2016 நவம்பர் 30 ஆம் திகதியில் உள்ளவாறு பின்வருமாறு அரிசி 23,751 மெ.தொ. அதாவது இறக்குமதி செய்யப்பட்ட 257,559 மெ.தொ. ஆன அரிசி இருப்பில் நூற்றிற்கு 9.22 வீதம் மேலும் களஞ்சியத்திலும் கொள்கலன்களில் இருக்க வேண்டும். (இணைப்பு 69 மற்றும் 70)

| | மெ.தொ. |
|---|---:|
| இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவு | 257,559 |
| மனித நுகர்விற்காக விற்பனை செய்யப்பட்ட அரிசியின் அளவு | (176,208) |
| | ------------ |
| | 81,351 |
| விலங்கின நுகர்விற்காக விற்பனை செய்யப்பட்ட அரிசியின் அளவு | (57,600) |
| | ------------ |
| 2016 நவம்பர் 25 ஆம் திகதி இருக்க வேண்டிய எஞ்சிய அரிசியின் அளவு | 23,751 |
| | ====== |

அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) 2016 நவம்பர் 30 ஆம் திகதி பிரதம கணக்காளரால் சமர்ப்பிக்கப்பட்ட அரிசி இறக்குமதி மற்றும் விற்பனை தொடர்பான தகவல்கள் சீராக்கப்பட்டதை அடுத்து 2016 நவம்பர் 25 ஆம் திகதி வரையில் இருக்க வேண்டிய எஞ்சிய அரிசி இருப்பு 23,751 மெட்ரிக் தொன் ஆன போதிலும் 2016 நவம்பர் 30 ஆம் திகதி முகாமையாளர் (செயற்பாடு) இனால் சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் படி அன்றைய தினத்தில் காணப்பட்ட எஞ்சிய அரிசி இருப்பு 15,804 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் எஞ்சிய அரிசி இருப்பு 7,947 மெ.தொ. ஆன வேறுபாடு நிலவியது. (இணைப்பு 69, 70 மற்றும் 71)

(ஆ) களஞ்சியத்திலும் கொள்கலன்களிலும் காணப்பட்ட எஞ்சிய அரிசி இருப்பு இது வரையிலும் பாரியளவில் சேதமடைந்துள்ளது.

(இ) இருப்பு அறிக்கை சரியாகப் பேணப்பட்டிராததன் காரணமாகவும் சகல விற்பனை நிலையங்கள் இணைக்கப்பட்டிராமையாலும் எஞ்சிய இருப்பின் அளவு மற்றும் பெறுமதி தொடர்பாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது.

(ஈ) இவ் எஞ்சிய அரிசி இருப்பில் ACE கொள்கலன் துறையில் வைத்துக்கொள்ளப்பட்டுள்ள 54 கொள்கலன்களிற்கு உரித்தான அரிசி 1,404 மெ.தொ. உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அவ் அரிசி இருப்பு இறக்குமதி செய்யப்பட்டு 19 மாதங்கள் கடந்திருந்த போதிலும், தொடர்ந்து இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களிலேயே காணப்பட்டன. (இணைப்பு 56)

(உ) 2016 நவம்பர் 25 ஆம் திகதி நிலவிய 23,751 மெ.தொ. இருப்பு எந்த வகைக்கு (பொன்னி சம்பா, நாடு மற்றும் வெள்ளை அரிசி) உரிய அரிசி இருப்பு என்பது குறித்த தகவல்கள் இருக்கவில்லை.

(ஊ) 2016 நவம்பர் 25 ஆம் திகதி நிலவிய கிரயம் ரூபா 1,543,815,000 (23,751,000 x 65) அளவில் 23,751 மெ.தொ. எஞ்சிய அரிசி இருப்பு இறக்குமதி செய்யப்பட்டு அன்றைய தினத்திற்கு 19 மாதங்களுக்கு மேலான காலம் கடந்திருந்த போதிலும் சேதமுற்றிருந்த அவ் அரிசி இருப்பு தொடர்பாக எடுக்கப்படும் எதிர்கால நடவடிக்கை யாது என்பது குறித்து இது வரையில் தீர்மானம் எடுக்கப்பட்டமைக்கான சான்றுகள் இருக்கவில்லை.

## 7. இறக்குமதி செய்யப்பட்ட அரிசிக்காக ஏற்கப்பட்ட மொத்தக் கிரயம்

துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு, லங்கா சதொச நிறுவகத்தின் சிரேஷ்ட கணக்காளர், இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகம், இலங்கை வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் மற்றும் மக்கள் வங்கியின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரால் முறையே 2016 யூலை 10 ஆம் திகதி, 2016 நவம்பர் 03, 29 மற்று 30 ஆம் திகதி, 2016 திசெம்பர் 01 ஆம் திகதி, 2016 திசெம்பர் 10 ஆம் திகதி மற்றும் 2016 நவம்பர் 29 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த தகவல்களின் படி, இறக்குமதி செய்யப்பட்ட 257,559

மெ.தொ. அரிசி கொள்வனவு செய்யப்படுவதற்காக பின்வருமாறு ரூபா 27,011,980,142 கூட்டுத்தொகையான கிரயத்தை ஏற்க நேர்ந்தது. (இணைப்பு 52, 55, 72, 73, 74 மற்றும் 75)

| செலவின வகை | பெறுமதி ரூபா |
|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மெ.தொ. 257,559 இன் கி.கா.கே | 15,996,534,772 |
| செலுத்தப்பட வேண்டிய சுங்க வரி | 5,835,656,743 |
| செலுத்தப்பட்ட மற்றும் செலுத்தப்பட வேண்டிய கடன் வட்டி (இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி) | 1,931,434,240 |
| இறக்குமதி செய்யப்பட்ட அரிசி அகற்றல், போக்குவரத்து மற்றும் தாமதக் கட்டணங்கள் | 1,712,645,855 |
| துறைமுகத்திற்குச் செலுத்தப்பட்ட மற்றும் செலுத்தப்பட வேண்டிய தாமதக் கட்டணங்களும் ஏனைய செலவினங்களும் | 694,325,310 |
| துறைமுகக் கட்டணம் | 404,307,958 |
| தனியார் களஞ்சியங்களிற்கான வாடகை | 213,038,701 |
| செலுத்தப்பட்ட சுங்க வரி | 132,770,828 |
| களஞ்சியசாலை ஊழியர் கட்டணம் | 52,100,114 |
| அகற்றல் செலவினங்கள் | 15,318,179 |
| மக்கள் வங்கியின் நிலுவைக் கடனுக்காக செலுத்தப்பட வேண்டிய தண்டனை வட்டி | 7,994,752 |
| களஞ்சிய காப்புறுதிக் கட்டணங்கள் | 6,455,731 |
| அரசாங்கக் களஞ்சியங்களிற்கான வைப்பு | 5,287,830 |

| | |
|---|---|
| களஞ்சிய மின்சாரக் கட்டணங்கள் | 1,932,160 |
| அரசாங்கக் களஞ்சியங்களிற்கான வாடகை | 1,849,969 |
| சட்டச் செலவினங்கள் | 327,000 |
| | ---------------------- |
| மொத்த கூட்டுத்தொகை | 27,011,980,142 |
| | ============= |

இது தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) இறக்குமதி செய்யப்பட்ட அரிசி 257,559 மெ.தொ. இற்காக 2016 திசெம்பர் 10 ஆம் திகதி வரையில் ரூபா 27,011,980,142 தொகை செலுத்தப்பட்டு/ செலுத்தப்பட வேண்டியமையால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி 1 கிலோ கிராமின் கிரயம் ரூபா 105 ஆகக் காணப்பட்டது.

(ஆ) இறக்குமதி செய்யப்பட்ட அரிசி உற்பத்தி, போக்குவரத்து மற்றும் தாமதக் கட்டணமாக 2014, 2015 ஆம் 2016 ஆம் ஆண்டுகளின் போது செலவிடப்பட்டிருந்த ரூபா 1,712,645,855 தொகையில் ரூபா 1,502,852,590 தொகை லிவர்பூல் நெவிகேஷன் நிறுவகத்திற்கு (அகற்றல் முகவர் நிறுவகம்) முற்பணமாக வழங்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு வழங்கப்பட்ட தொகையில் ரூபா 302,963,336 தொகை 2016 ஒக்டோபர் 18 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. (இணைப்பு 76)

(இ) மக்கள் வங்கிக் கடன் தவணையை முறையாகச் செலுத்தத் தவறியதன் விளைவாக 2016 நவம்பர் 21 ஆம் திகதி ரூபா 7,994,752 தொகையான தண்டப்பண வட்டியாகச் செலுத்தப்பட வேண்டியிருந்தது. (இணைப்பு 75)

(ஈ) 2015 சனவரி 15 ஆம் திகதியின் பின்னர் லங்கா சதொச நிறுவகத்தால் இறக்குமதி செய்யப்பட்டிருந்த அரிசி 148,750 மெ.தொ. இற்காக இலங்கை சுங்கத்திற்குச் செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா

5,835,656,743 கூட்டுத்தொகையான பின்வரும் வரித் தொகை 2015 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாட்டு சேமிப்புகளின் மூலம் தீர்க்கப்படுவதற்கு கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு (முன்னாள் உணவுப் பாதுகாப்பு அமைச்சு) நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் 2016 நவம்பர் 30 ஆம் திகதி வரையிலும் அந் நிலுவையான வரித் தொகை தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந் நிலுவைத் தொகை பாதீட்டு ஏற்பாட்டின் மூலம் செலுத்தப்பட நேர்வதால் ரூபா 5,835,656,743 தொகையான அவ் வரித் தொகை அரசாங்கத்தினால் ஏற்க நேர்ந்திருந்தது. (இணைப்பு 73)

செலுத்த வேண்டிய சுங்க வரி மற்றும் ஏனைய கட்டணங்கள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.

| | **உணவுப் பாதுகாப்பு அமைச்சு** | **கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு** |
|---|---|---|
| | ----------------- | ---------------------- |
| | **ரூபா** | **ரூபா** |
| சுங்க வரி (CID) | 476,560,000 | 1,020,495,000 |
| துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய வரி (PAL) | 45,014,388 | 97,030,524 |
| தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT) | 30,237,832 | 65,343,957 |
| பெறுமதி சேர் வரி (VAT) | 166,307,996 | 351,741,266 |
| விசேட வியாபாரப் பொருள் வரி (SCL) | 3,582,925,780 | - |
| | ----------------- | ----------------- |
| | 4,301,045,996 | 1,534,610,747 |
| | =========== | ============= |

(உ) ரூபா 1,931,434,240 தொகையான செலுத்தப்பட்ட மற்றும் செலுத்தப்பட வேண்டிய வங்கி வட்டி மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி முறையே 2016 நவம்பர் 21 ஆம் திகதி மற்றும் 2016 திசெம்பர் 09 ஆம் திகதி வரை மாத்திரம் கணிப்பிட்டிருந்தமையால் மேலும் செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 7,786,400,532 தொகையான கடன் தொகைக்காக அந் நாட்களிற்குப் பின்னைய காலப்பகுதிக்காகவும் கடன் வட்டி செலுத்தப்பட வேண்டியிருந்தது. (இணைப்பு 74, 75)

(ஊ) களஞ்சியங்களிலும் தனியார் கொள்கலன்துறைகளிலும் 23,751 மெ.தொ. அரிசி இருப்பு நிலவியமையால் களஞ்சிய வாடகை, மின்சாரக் கட்டணம், தனியார் கொள்கலன் துறைகளிற்கான வாடகை, அரிசி களஞ்சியங்களிற்கான தாமதக் கட்டணம், போக்குவரத்துச் செலவினம் மற்றும் ஊழியர் கட்டணம் 2016 செப்தெம்பர் 30 ஆம் திகதியின் பின்னர் மேலும் செலுத்தப்பட வேண்டியிருந்தது.

**8. இறக்குமதி செய்யப்பட்ட அரிசி விற்பனையிலிருந்து பெறப்பட்ட வருமானம்**

லங்கா சதொச நிறுவகத்தின் சிரேஷ்ட கணக்காளரால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 2016 நவம்பர் 30 ஆம் திகதிய தகவலின் படி, இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, சலுகை விலைக்கு விற்பனை செய்யப்பட்டதன் மூலமும் விலங்கின உணவிற்காக விற்பனை செய்யப்பட்டதன் மூலமும் லங்கா சதொச நிறுவகம் பின்வரும் ரூபா 11,854,949,124 தொகையான விற்பனை வருமானத்தைப் பெற்றிருந்தது. (இணைப்பு 69 மற்றும் 70)

| ஆண்டு | அரிசி வகை | விற்பனை செய்யப்பட்ட அளவு (கி.கி) | விற்பனை செய்யப்பட்ட விலை (ஒரு கி.கி) | விற்பனையால் பெற்ற வருமானம் |
|---|---|---|---|---|
| -------- | | --------- | ------------ | ------------ |
| 2014 | வெள்ளை அரிசி | 19,233,670 | 50 | 961,683,495 |
| | நாடு அரிசி | 27,982,128 | 55 | 1,539,017,034 |
| | பொன்னி சம்பா | 55,608,410 | 60 | 3,336,504,573 |
| 2015 | வெள்ளை அரிசி | 53,789,534 | 50 | 2,689,476,705 |
| | நாடு அரிசி | 7,234,819 | 55 | 397,915,050 |
| | பொன்னி சம்பா | 12,359,204 | 60 | 741,552,267 |
| 2016 | விலங்கின உணவு | 57,600,000 | 38 | 2,188,800,000 |
| | | ----------------- | | ---------------------- |
| | | 233,807,765 | | 11,854,949,124 |
| | | ============ | | =============== |

இது தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) “சலுகை விலைக்கு அரிசி விற்பனை செய்யப்படுவதற்காக சனாதிபதியிடம் இருந்து அமைச்சருக்கு அறிவுறுத்தல் கிடைக்கப்பெற்றதாக” சதொச தலைவருக்கு முகவரியிடப்பட்ட கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வாணிப அமைச்சுச் செயலாளரின் 2014 நவம்பர் 27 ஆம் திகதிய CIT/6-13/Import ஆம் இலக்க கடிதத்தின் மூலம் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ் விலைகள் தீர்மானிக்கப்பட்ட அடிப்படை தொடர்பான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. (இணைப்பு 77)

(ஆ) 2015 சனவரி 01 ஆம் திகதி கூட்டுறவு சங்கப் பிரதிநிதிகளிற்கும் நிதி, திட்டமிடல் அமைச்சுச் செயலாளரிற்கும் இடையே நிலவிய கலந்துரையாடலில் அரிசி சலுகை விலையில் விற்பனை செய்யப்படுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டதாக” அபிவிருத்தி நிதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வியாபார அமைச்சுச் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட

DFD/CIT/2015 ஆம் இலக்க 2015 சனவரி 02 ஆம் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ் விலைகள் தீர்மானிக்கப்பட்ட அடிப்படை தொடர்பான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. (இணைப்பு 78)

(இ) நிதி அமைச்சரால் பொன்னி சம்பா அரிசியின் விற்பனை விலை 2015 யூலை 15 ஆம் திகதி முதல் ரூபா 75 இலிருந்து ரூபா 69 வரை குறைப்பதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாக அபிவிருத்தி நிதி திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டதாக" கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் செயலாளரால் லங்கா சதொச தலைவருக்கு முகவரியிடப்பட்ட 2015 யூலை 15 ஆம் திகதிய 101/Sec/Ins/01 ஆம் இலக்க கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ் விலைகள் தீர்மானிக்கப்பட்ட அடிப்படை தொடர்பான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. (இணைப்பு 79)

(ஈ) லங்கா சதொச நிறுவகம், இறக்குமதி செய்திருந்த 257,559 மெ.தொ. அளவிலான அரிசி இருப்பில் 3,048 மெ.தொ. 2015 நவம்பர் 17 ஆம் திகதி இடம்பெற்ற வாழ்க்கைச் செலவினம் தொடர்பான அமைச்சரவை உப குழுவின் தீர்மானத்தின் படியும் 85,000 மெ.தொ. அரிசி 2016 மார்ச் 16 ஆம் திகதிய 16/0454/723/14 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் படி விலங்கின உணவிற்காக விற்பனை செய்யப்படுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. இதன் படி, இறக்குமதி செய்யப்பட்ட 257,559 மெ.தொ. அளவிலான அரிசி இருப்பில் 57,600 மெ.தொ. அதாவது 22.36 சதவீதம் 2016 ஒக்டோபர் 16 ஆம் திகதி வரையிலும் 01 கி.கி. ரூபா 38 படி ரூபா 2,188,800,000 இற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன. (இணைப்பு 69, 80, 81)

**9. அரிசி இறக்குமதி செய்யப்பட்டமையால் ரூபா 15,157,031,018 தொகையான நட்டம் லங்கா சதொச நிறுவகத்திற்கு.'. அரசாங்கத்திற்கு நேர்ந்திருந்தமை**

லங்கா சதொச நிறுவகத்தால் 2014 ஆம் 2015 ஆம் ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த அரிசி இறக்குமதிக்காக 7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு ரூபா 27,011,980,142 தொகையான கிரயம் ஏற்கப்பட நேர்ந்த போதிலும், 8 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டவாறு அரிசி விற்பனையில் இருந்து ரூபா 11,854,949,124 மாத்திரமே பெறப்பட்டிருந்தது. இதன் படி, அரிசி விற்பனை செய்ததில் இருந்து லங்கா சதொச நிறுவகத்திற்கு/ அரசாங்கத்திற்கு ரூபா 15,157,031,018 தொகையான நட்டம் நேர்ந்திருந்தது.

**10. அரிசி இறக்குமதிக்காக நிதி வழங்கல்**

அரிசி இறக்குமதிக்காகஇலங்கை வங்கியினூடாகவும் மக்கள் வங்கியினூடாகவும் நாணயக் கடிதம் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அவ் வங்கிகளின் நாணயக் கடிதங்களுக்காக ரூபா 14,086,576,123 கூட்டுத்தொகையான கடன் தொகை பெறப்பட்டிருந்ததுடன் 2016 நவம்பர் 21 ஆம் 2016 திசெம்பர் 09 ஆம் திகதி வரையில் இதில் ரூபா 8,939,763,519 தொகை மேலும் கடன் மற்றும் வட்டியாக செலுத்தப்பட இருந்தது. விபரம் பின்வருமாறாகும். (இணைப்பு 74 மற்றும் 75)

| வங்கி | பெற்றுக் கொண்ட கடன் தொகை | 2016.11.21.'.12.09 ஆம் திகதி வரையில் | | செலுத்த வேண்டிய கடன் தொகை | செலுத்த வேண்டிய வட்டி |
|---|---|---|---|---|---|
| | | செலுத்தப்பட்டிருந்த கடன் தொகை | செலுத்தப்பட்டிருந்த வட்டித் தொகை | | |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| இலங்கை வங்கி | 7,449,088,123 | 901,489,803 | 224,267,074 | 6,547,598,320 | 1,114,170,335 |
| மக்கள் வங்கி | 6,637,488,000 | 5,398,685,788 | 561,798,931 | 1,238,802,212 | 39,192,652 |
| | 14,086,576,123 | 6,300,175,591 | 786,066,005 | 7,786,400,532 | 1,153,362,987 |

இது தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) மேற்குறித்த வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய கடன் மற்றும் வட்டி தொடர்பாக ரூபா 8,336,067,913 தொகையும் ரூபா 418,335,864 தொகையுமாக அதாவது ரூபா 8,754,403,777 கூட்டுத்தொகை திறைசேரியால் செலுத்தப்படுவதற்காக 2016 மார்ச் 24 ஆம் திகதிய 16/0454/723/014 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும், அக் கடன் தொகையைத் திறைசேரி இது வரை செலுத்தியிருக்கவில்லை. (இணைப்பு 81)

(ஆ) ரூபா 6,000,000,000 கூட்டுத்தொகையான (45,000,000 ஐ.அமெ.டொ) BTD–M 63519 மற்றும் BTD-M 63537 ஆம் இலக்க 02 நாணயக் கடிதங்கள் காலாவதியாகும் வரையில் அதாவது 2015 பெப்ரவரி 20 ஆம் திகதி வரையிலும் அந் நாணக் கடிதங்கள் இரண்டின் மூலம் ரூபா 591,833,640 பெறுமதியான 9,813 மெ.தொ. அரிசி இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. எனினும், பின்னர் சந்தையில் அரிசித் தேவைப்பாடு மற்றும் தற்போதைய இருப்பின் நிலை தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு மேற்குறித்த 02 நாணக் கடிதங்களும் மீள நீடிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராவிடின், இலங்கை வங்கியிலிருந்து ரூபா 5,361,911,463 பெறுமதியான கடன் தொகையைப் பெற்றுக்கொள்ளாது விடுவதற்கான இயலுமை காணப்பட்டது. இதன் படி, 2 நாணக் கடிதங்களின் காலத்தை நீடிக்காது விட்டிருப்பின் 2016 திசெம்பர் 09 ஆம் திகதியில் உள்ளவாறு இலங்கை வங்கிக்குச் செலுத்தப்படுவதற்கிருந்த கடன் தொகையும் வட்டித் தொகையுமான ரூபா 7,661,768,655 இற்காக ரூபா 1,388,332,244 மாத்திரமேயாவதற்கான இடம் காணப்பட்டது. (இணைப்பு 33, 74 மற்றும் 75)

## 11. இறக்குமதி செய்யப்பட்ட அரிசிக்காக மேலதிக களஞ்சிய வசதிகள் பெற்றுக்கொள்வதற்கு நேர்ந்தமை

லங்கா சதொச நிறுவகம் சந்தையில் அரிசித் தேவைப்பாட்டையும் நிலவும் களஞ்சிய அளவுகள் தொடர்பாகக் கவனம் செலுத்தாது இறக்குமதி செய்யப்பட்ட அரிசி இருப்புகள் குறுகிய காலப்பகுதிக்குள் கிடைக்கப்பெற்றதன் காரணமாக அது வரையிலும் பயன்படுத்தப்பட்டிருந்த

களஞ்சியங்களிற்கு மேலதிகமாக அரச மற்றும் தனியார் பிரிவிடம் உள்ள களஞ்சியங்கள் மாதாந்த வாடகை செலுத்தப்படும் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு நேர்ந்திருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு உரித்தான 10 களஞ்சியங்களும் தனியார் நிறுவகங்கள்/ தனிநபர்களிற்கு உரிய 10 களஞ்சியங்கள் பெறப்பட்டிருந்ததுடன் 2014 முதல் 2016 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்காக உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கும் தனியார் பிரிவுகளிற்கு முறையே ரூபா 7,137,799 தொகையும் ரூபா 213,038,701 தொகையுமாக ரூபா 220,176,500 கூட்டுத்தொகையைச் செலுத்த நேர்ந்திருந்தது. (இணைப்பு 72 மற்றும் 82)

(ஆ) மேலே 5.1 (ஆ) இல் குறிப்பிடப்பட்டவாறு களஞ்சியங்கள் தேர்ந்தெடுக்கப்படுகையிலும் அரசாங்க கொள்வனவு நடைமுறை வழிகாட்டலின் விதிமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக களஞ்சியங்களின் அளவு, விலைகள், களஞ்சியங்களின் நிலை தொடர்பாக முறையான ஆய்வின்றி களஞ்சியங்கள் பெற்றுக்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. (இணைப்பு 10)

(இ) கொள்வனவு நடைமுறை பின்பற்றப்படாததன் காரணமாக அக் களஞ்சியத்திற்கான மாதாந்த வாடகை செலுத்தப்படுகையிலும் உரிமையாளர்கள் சமர்ப்பித்த அளவீடுகளின் அடிப்படையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பின்னர் லங்கா சதொச பொறியியல் பிரிவால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக அளவீட்டு ஆய்வில் 07 களஞ்சியங்களுக்கு உரித்தான உரிமையாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அளவீட்டுத் தகவல்கள் தவறானவை என்பது கண்டறியப்பட்டிருந்தன. இதன் படி, லங்கா சதொச நிறுவகத்தால் களஞ்சிய வாடகையாக மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 9,246,260 தொகை 2016 நவம்பர் 04 ஆம் திகதி மீள அறவிடப்பட்டிருந்தது. (இணைப்பு 83)

(ஈ) அரிசி களஞ்சியப்படுத்தப்படுவதற்கு ஏற்ற நிலையில் களஞ்சியம் இன்மை

(i) ஏகல பிரதேசத்தில் உள்ள தனி உரிமையாளருக்கு உரித்தான 03 களஞ்சியங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அக் களஞ்சியங்கள் கைவிடப்பட்டிருந்த தொழிற்சாலை ஒன்றின் கட்டிடம் என களஞ்சியப் பொறுப்பாளரினதும் மக்கள் சுகாதாரப் பரிசோதகர்களினதும் வாக்குமூலங்கள் பெறப்பட்டிருந்தன. இக் களஞ்சியங்கள் வெடிப்புடனான சீமேந்து இடப்பட்ட தரை, கூரை துளைகளுடனான பகுதியைக் கொண்டிருந்தமை, கதவுகளிற்கிடையே இடைவெளி காணப்பட்டமையால் எலிகள், நாய்கள் போன்ற விலங்கினங்களுக்கும், பறவைகளுக்கும் நுழையக் கூடிய விதத்தில் இருந்தமை பௌதீக கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ii) வேயங்கொட களஞ்சியங்களில் நிலவும் குறைபாடுகள் தொடர்பாக வேயங்கொட மக்கள் சுகாதார பரிசோதகரால் 2016 மார்ச் 11 ஆம் திகதி அத்தனகல நீதவானால் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த B/398/16 ஆம் இலக்க மேலதிக அறிக்கையின் மூலமும் எடுத்துக்கூறப்பட்டிருந்தன. (இணைப்பு 84)

(iii) இவ்வாறே அத்தனகல நீதவான் நீதிமன்றத்தால் வேயங்கொடவில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த அரிசி தொடர்பாக பரீட்சித்து ஓர் அறிக்கையை வழங்குமாறு 2016 மார்ச் 21 ஆம் திகதி கன்னோருவ விலங்கின உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளருக்குக் கட்டளையிடப்பட்டிருந்தது. அக் கட்டளையின் படி, 2016 மே 11 ஆம் திகதி நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் களஞ்சியங்களில் பேணப்படும் நலிவுகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. (இணைப்பு 85)

- 01, 08 மற்றும் 13 இலக்கக் களஞ்சியங்கள் சுகாதாரத்திற்கு தீங்கு விளைவிக்கும் வகையில் திருப்தியற்ற நிலையில் காணப்படுவதாக

- சுவர் மற்றும் கூரைகள் சேதமடைந்துள்ளதாக

- கூரைகளிலும் சுவர்களிலும் இருந்து மழை நீர் கசிந்து உள்ளதாக

- கருத்திற்கொள்ளப்பட வேண்டிய அளவில் சேதமுற்றுள்ள அரிசி மூடைகளும் பழுதடைந்த அரிசி உள்ளதாகவும்

(உ) அரிசி களஞ்சியப்படுத்தப்படுவதற்காக சரியான முறைகள் பின்பற்றப்பட்டிராமை.

(i) வேயங்கொட மற்றும் ஏகலவில் உள்ள களஞ்சியங்களில் அரிசி களஞ்சியப்படுத்தப்படுவது ஆரம்பிக்கப்படும் சந்தர்ப்பம் வரையிலும் களஞ்சியப் பொறுப்பாளர்கள் ஈடுபடுத்தப்பட்டிராத காரணத்தால் அது வரையில் சதொச நிறுவகத்தின் ‘‘பல்வேறு பகுதி உதவியாளர்கள்’’ ஆகச் செயற்பட்ட உத்தியோகத்தர்கள் இருவர் நியமிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் அந் நியமனங்கள் எழுத்து மூலம் வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. களஞ்சிய நிர்வாகம் தொடர்பில் போதிய அறிவு அல்லது அனுபவம் இல்லாத உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுவதற்கும் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு களஞ்சியத்தைப் பேணுதல், அரிசி களஞ்சியப்படுத்தும் முறைமை, பதிவு செய்தல், வழங்கல் தொடர்பாக எவ்வித பயிற்சியும் வழங்கப்படுவதற்கேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அரிசியுடனான கொள்கலன்கள் களஞ்சியத்திற்குக் கொண்டுவரப்படுகையில் கொள்கலன்களில் உள்ள அரிசியின் அளவு (மூடைகளின் எண்ணிக்கை), அரிசியின் வகை, நிறை தொடர்பான தகவல்கள் உள்ளடக்கிய எந்தவித தகவல்களும்/ பதிவேடும் களஞ்சியத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே, களஞ்சியங்களின் நிறை அளவிடும் உபகரணத்தை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) அதிக கொள்கலன் அளவைப் பெற்றுக்கொள்ளல், களஞ்சியப்படுத்தல் தொடர்பான ஓர் அறிவு இல்லாத காரணத்தால் அரிசி களஞ்சியப்படுத்தப்படுகையில் முதலில் பெறும் அரிசி முதல் விநியோகிக்கப்படக் கூடிய வகையில் (FIFO) களஞ்சியப்படுத்தப்படுவதற்கு முடியாத காரணத்தால் அரிசியின் இருப்பை நீண்ட காலமாக களஞ்சியத்தில் வைத்துக்கொள்வதற்கு நேர்ந்திருந்தது. (இணைப்பு 80)

(iv) இவ்வாறே அரிசி களஞ்சியப்படுத்தப்படுகையில் பௌதீக ரீதியாக கணிப்பிட்டு புகையிட்டு பாதுகாப்பான முறைமைகளைப் பின்பற்றக்கூடிய வகையில் களஞ்சியப்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராததுடன் மரத்தால் அமைக்கப்பட்ட மேடைகளுக்குப் பதிலாக வெளி நிலத்தில் களஞ்சியப்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. (இணைப்பு 80)

(v) துறைமுக வளாகத்திலும் தனியார் கொள்கலன் துறைகளிலும் நீண்ட காலமாக அரிசி அடங்கிய கொள்கலன்கள் வைத்துக்கொள்ளப்பட்டிருந்ததன் காரணமாக சேதமுற்றிருந்த அரிசி இருப்புகளும் எவ்வித பரீட்சிப்பிற்காகவும் இன்றி நல்ல நிலையில் உள்ள அரிசிக் களஞ்சியங்களிற்கே களஞ்சியப்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததன் காரணமாக நல்ல நிலையில் நிலவிய அரிசியும் விரைவாகச் சேதமடைவதற்கு காரணமாகியிருந்தன. (இணைப்பு 80)

(vi) இறக்குமதி செய்யப்பட்ட அரிசி தொடர்பாக பரீட்சிக்கப்படுவதற்காக கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சுச் செயலாளரால் 2015 ஒக்டோபர் 16 ஆம் திகதி உணவு ஆணையாளர் நாயகத்தின் பங்கேற்புடன் நியமிக்கப்பட்ட ஐவர் அடங்கிய குழுவால் வழங்கப்பட்ட அறிக்கையில் களஞ்சிய முறைகளில் நிலவிய நலிவுகள் தொடர்பான தகவல்கள் கண்டறியப்பட்டிருந்தன. (இணைப்பு 80)

**(ஊ) பௌதீக இருப்பு கணிப்பிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை**

வேயங்கொட மற்றும் ஏகலவில் உள்ள களஞ்சியங்களுக்காக முறையே 2014 ஒக்டோபர் 08 ஆம் 2014 நவம்பர் 25 ஆம் திகதி முதல் அரிசி கிடைக்கப்பெற்றிருந்ததுடன் அவ்வாறு கிடைக்கப்பெற்ற அரிசியின் அளவின் சரியான தன்மையைக் கணிப்பிட்டு களஞ்சியப்படுத்தியுள்ள விதம் பரீட்சிக்கப்படுவதற்கு, பதிவேடுகளில் சரியான தன்மையைப் பரீட்சிக்கப்படுவதற்கு லங்கா சதொச நிறுவகத்தால் எந்தச் சந்தர்ப்பத்திலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக நிலவும் அரிசியின் இருப்பின் அளவு தொடர்பாக களஞ்சியப் பொறுப்பாளர்கள் சமர்ப்பித்த தகவல்களில் சரியான தன்மை தொடர்பான ஓர் உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

## 12. பொது அவதானிப்புகள்

(அ) லங்கா சதொச நிறுவகத்தில் ஈடுபடுத்தப்பட்ட மூலதனத்தில் 97.5 சதவீதமும் பொதுத் திறைசேரிச் செயலாளரிடம் காணப்பட்ட போதிலும், மேற்குறித்த அறிக்கையில் அடங்கிய அவதானிப்புகளைக் கருத்திற்கொள்கையில் திறைசேரிச் செயலாளரால் முறையான கண்காணிப்பு/ ஆலோசனை வழங்கப்பட்டமைக்கு சான்றுகள் இருக்கவில்லை. (இணைப்பு 04)

(ஆ) விவசாயத் திணைக்களத்தின் சமூக பொருளாதார மற்றும் திட்டமிடல் நிலையத்தின் பணிப்பாளரால் அனுப்பிவைக்கப்பட்ட 2016 நவம்பர் 07 ஆம் திகதிய SEPC/STAT/AUDIT/(DOA) ஆம் இலக்க கடிதத்தின் தகவல்களின் படி, 2014 ஆம் ஆண்டைத் தவிர 2012, 2013 ஆம் 2015 ஆம் ஆண்டுகளில் உள்நாட்டு அரிசி உற்பத்தி, உண்மையான பயன்பாட்டைப் பார்க்கிலும் அதிகரித்துக் காணப்பட்ட போதிலும், 2012, 2013 ஆம் 2015 ஆம் ஆண்டுகளின் போது அரிசி இறக்குமதி செய்யப்பட்டிருத்தது. (இணைப்பு 86)

(இ) 2014 ஆம் ஆண்டின் போது உள்நாட்டில் பயன்படுத்தப்படுவதற்காக போதிய அரிசி இருப்பில் பற்றாக்குறை ஒன்று நிலவிய போதிலும், 2013 ஆம் 2014 ஆம் ஆண்டுகளின் போது கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் (சதொச) ஆல் அரிசி 4015 மெ.தொ. டுபாயில் உள்ள Prateek General Trading நிறுவனத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக சதொச வால் 2015 பெப்ரவரி 06 ஆம் திகதி உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. (இணைப்பு 87)

(ஈ) வாழ்க்கைச் செலவினம் மற்றும் நாட்டின் நுகர்வுப் பொருட்கள் தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படும் வாழ்க்கைச் செலவின துணைச் செயற்பாட்டுக் குழுவிற்கு கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சினதும் இதன் கீழ் உள்ள நிறுவகங்களின் உத்தியோகத்தர்கள்/ உரிய தலைவர்கள் மற்றும் நிதி அமைச்சின் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டிருந்த போதிலும், சரியான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு உப குழுவினால் தீர்மானம் எடுக்கப்பட்டமை கண்டறியப்பட்டிருக்கவில்லை.

(உ) இறக்குமதிக்கான தீர்மானம் எடுக்கப்படும் சந்தர்ப்பங்களின் போது நாட்டில் உள்நாட்டு அரிசி உற்பத்தி, நெல் சந்தைப்படுத்தல் சபையில் உள்ள நெல் இருப்பு, கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தால் 2014 ஆம் ஆண்டின் போது இறக்குமதி செய்யப்பட்டிருந்த அரிசி இருப்பு மற்றும் தனியார் துறையிடம் காணப்படும் அரிசி இருப்பு தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) லங்கா சதொச நிறுவகத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் தரவுகளின் சரியான தன்மை குறித்து சிக்கல் நிலை ஏற்பட்டிருந்தது.

(எ) கொள்கலன்களில் அடங்கிய அரிசி தொடர்பான எழுத்து மூல தகவல்கள் இன்மை, நிறை அளவிடப்படுவதற்கான உபகரணம் இன்மை, ஒவ்வொரு நாளும் மிகப் பாரிய அளவிலான கொள்கலன்கள் வந்தடைதல் போன்ற காரணத்தாலும் (சில நாட்களில் 90 கொள்கலன்களைப் பார்க்கிலும் அதிகளவானவை வந்தடைந்திருந்தன). கொள்கலன்களில் உள்ள அரிசியின் அளவு, வகை தொடர்பான சரியான தகவல்கள் பதிவு செய்யப்படுவதற்கு களஞ்சியத்திற்குப் பொறுப்பாகச் செயற்படும் உத்தியோகத்தர்களுக்கு இயலாதிருந்தது. இதன் காரணமாக களஞ்சியப் பொறுப்பாளரிடம் உள்ள பதிவேடுகளில் குறிப்பிடப்பட்ட அளவும் இறக்குமதி செய்யப்பட்ட பதிவேடுகளினதும் (கப்பல் பொறுப்புப் பத்திரம் ) குறிப்பிடப்பட்ட அளவிற்கும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வையின் போது 05 வார்நாமங்கள் (Bill of Lading) இற்கு உரித்தான 134 கொள்கலன்கள் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட நாடு அரிசியின் அளவு 3,562 மெ.தொ. ஆகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், களஞ்சியப் பொறுப்பாளர்களின் பதிவேடுகளின் படி, கிடைக்கப்பெற்ற அரிசியின் அளவு 3,379.6 மெ.தொ. ஆகக் குறிப்பிடப்பட்டிருந்ததன் காரணமாக 182.4 மெ.தொ. வேறுபாடு அவதானிக்கப்பட்டிருந்ததுடன் இத்தகைய வேறுபாடுகள் குறித்து லங்கா சதொச நிலையம் எவ்வித பரீட்சிப்பையும் மேற்கொண்டிருக்கவில்லை. (இணைப்பு 88)

(ஏ) லங்கா சதொச நிறுவகத்தின் மாதாந்த அரிசி விற்பனை தொடர்பான தகவல்கள் மற்றும் நிலவிய இருப்பு தொடர்பான சரியான தகவல்கள் வழங்கப்பட்டிராமையால் இவ் அரிசி கட்டளையிடப்படும் சந்தர்ப்பத்தில் லங்கா சதொச நிறுவகத்திடம் காணப்பட்ட இருப்பின் நிலை தொடர்பாக பகுப்பாய்வு ஒன்றை மேற்கொள்ள முடியாதிருந்தது.

**13. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாடுகளில் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிறுவகத்தின் தகவல் முறைமைக்கு சகல விற்பனை நிலையங்களும் களஞ்சியங்களும் இணைக்கப்பட்டிராமை.

(ஆ) களஞ்சியங்களில் முறையான இருப்புக் கட்டுப்பாட்டு முறையொன்று செயற்படுத்தப்பட்டிராமை.

(இ) கணக்கீட்டு நடவடிக்கைகளின் போது முறையாக வருமானங்களும் செலவினங்களும் வகைப்படுத்தப்பட்டு இதற்காக ஓர் கோவையொன்று பேணப்படுவது நலிவான நிலையில் காணப்பட்டது. ஆகையால் நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதில் பாரிய தாமதம் நிலவியது.

(ஈ) உயர் முகாமைத்துவத்தில் பெரும்பாலான பதவிகள் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தமையால் நிறுவகச் செயற்பாடுகள் தொடர்பில் பொறுப்பு நலிவான நிலையில் காணப்படல்.

(உ) உள்ளக கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல் மற்றும் நடவடிக்கை எடுத்தல் போதியளவில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நிறுவகத்தின் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படுகையில் ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் போதும் பணிப்பாளர் சபையின் தேவைக்கேற்ப நேர்ந்திராததுடன் பல்வேறு சந்தர்ப்பங்களின் போது தலைவர், திறைசேரி மற்றும் வழி அமைச்சு இதற்காக தீர்க்கமாக ஈடுபட்டிருத்தல்.

(எ) நிறுவகத்திற்கு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுகையிலும் விலகிச் செல்கையிலும் உத்தியோகபூர்வ கோவைகள் எழுத்துமூலமாக

முறைப்படி ஒப்படைக்கப்படல்/ பொறுப்பேற்றல் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஏ) கொள்வனவு நடைமுறைகளின் போது அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டலுக்கு மாறாக நடவடிக்கை எடுக்கப்படல்.

(ஐ) நிறுவக உத்தியோகத்தர்களுக்கு எழுத்து மூல பணி ஒப்படைகள் வழங்கப்பட்டிராமை.

## 14. பரிந்துரைகள்

பின்வரும் பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) வாழ்க்கைச் செலவின துணைச் செயற்பாட்டுக் குழுவில் கலந்துகொள்ளும் அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் அமைச்சரவைக்கு குறித்த தகவல்களை சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதாக.

(ஆ) அரிசி உற்பத்தி, கேள்வி மற்றும் இறக்குமதி தொடர்பாக தீர்மானம் எடுக்கையில் நாட்டின் மொத்த நிலை தொடர்பாக இலங்கை மத்திய வங்கி, தொகை மதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களம் போன்ற நிறுவகங்களின் தரவுகள் மற்றும் தகவல்கள் தொடர்பாக முறையான கவனம் செலுத்தப்பட வேண்டியதாக.

(இ) அரசாங்க நிறுவனமான லங்கா சதொச நிலையத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக பொதுத் திறைசேரி, பொது முயற்சிகள் திணைக்களம், முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களம், திறைசேரிச் செயற்பாட்டுத் திணைக்களம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் போன்ற திணைக்களங்களால் முறையான கண்காணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டியதாக.

(ஈ) அரிசி இறக்குமதி தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட முன்னர் நாட்டின் உள்நாட்டு அரிசித் தேவைப்பாடு, நெல் உற்பத்தி, ஒட்டுமொத்த இருப்பு நிலை தொடர்பான சரியான தரவுகள் பெற வேண்டியதாக.

(உ) அமைச்சரவை சரியான தீர்மானங்களை எடுப்பதற்குத் தேவையான சகல தகவல்களையும் அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் அமைச்சரவைக்கு வழங்கப்படுவதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டியதாக.

(ஊ) லங்கா சதொச அரசாங்கக் கம்பனியானமையாலும் முறையான கொள்வனவு முறையொன்றைப் பேணியிராமையாலும் சகல கொள்வனவிற்காகவும் 2006 சனவரி 25 ஆம் திகதிய தே.கொ.வ. சுற்றறிக்கையின் 08 ஆம் இலக்க தேசிய கொள்வனவு வழிகாட்டல் நடைமுறையின் வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டியதாக.

(எ) தகைமை உடைய வழங்குனர்கள் வருடாந்தம் பதிவு செய்து அவசர சந்தர்ப்பங்களின் போது அவ் வழங்குனர்களிடம் இருந்து விலை மனுக்கள் கோரப்பட்டு கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டியதாக.

(ஏ) பணத்திற்கான பெறுமதி எனும் கருத்தைப் பாதுகாக்கும் வகையில் பொருளாதார, செயலாற்றல் மற்றும் வினைத்திறன் போன்ற அம்சங்களைப் பாதுகாக்கும் வகையில் கொள்வனவு நடைமுறையைச் செயற்படுத்த வேண்டியதாக.

(ஐ) நிறுவகத்திற்குத் தேவையான பதவியணியை மீள மீளாய்வு செய்து அதன் படி, தயாரிக்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி வெற்றிடத்திற்காக தகைமை பெற்ற மற்றும் அனுபவம் வாய்ந்த நபர்களைச் சேர்ப்பதற்கும் அவ் உத்தியோகத்தர்களை நிறுவகத்தில் தக்க வைத்துக்கொள்வதற்காகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதாக.

(ஓ) சகல உத்தியோகத்தர்களினதும் உத்தியோகபூர்வ கோவைகளைப் பொறுப்பேற்றல் மற்றும் ஒப்படைத்தலை முறையான நடைமுறைப்படி மேற்கொள்ளப்பட வேண்டியதாக.

(ஓ) லங்கா சதொச நிறுவகத்தில் முறையான கணனி தகவல் முறை ஒன்றை ஸ்தாபித்து அதற்கு சகல விற்பனை நிலையங்களையும் களஞ்சியங்களையும் இணைத்துக்கொள்ள வேண்டியதாக.

(ஔ) ஒவ்வொரு விற்பனை நிலையத்திற்கும் களஞ்சியத்திற்கும் முறையான இருப்புக் கட்டுப்பாட்டு முறை ஒன்றை அறிமுகப்படுத்த வேண்டியதாக.

(க) நிறுவகத்தின் முக்கிய தீர்மானங்கள் பணிப்பாளர் சபைக்கு தொடர்புபடுத்தி தீர்மானம் எடுக்க வேண்டியதாக.

(கா) பணிப்பாளர் சபை பிரதிநிதித்துவப்படுத்தும் திறைசேரி உத்தியோகத்தர்களிடம் இருந்து அதி சிறந்த ஆலோசனைகளை மேற்கொள்ள வேண்டியதாக.

(கி) உள்ளகக் கணக்காய்வு அலகை உறுதிப்படுத்தி உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ள வேண்டியதாக.

(கீ) கொள்வனவு வழிகாட்டல் நடைமுறையின் 8.9.1 (இ) மற்றும் கொள்வனவு செயல்நூலின் 8.9.3 இன் படி ரூபா 500,000 இற்கு மேற்படும் சகல பொருட்களும் சேவைகளும் வழங்கல்களின் போது உரிய அதிகாரிகளால் கைச்சாத்திடப்பட்ட முறையான உடன்படிக்கைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டியதாக.

## 15. முடிவுகள்

(அ) கொள்வனவு நடைமுறையின் அடிப்படை நோக்கங்களிற்கு உட்படுத்தப்பட்ட, உயர் தரத்திலான குறைந்த கிரயத்தை ஏற்பதன் விளைவாக ஆகக் கூடுதலான பொருளாதார நன்மையை ஏற்படுத்திக்கொள்ளல், உரிய கால நேரத்தில் தரத்திலான கொள்வனவு நடைமுறைகளை மேற்கொள்ளல்.

குறித்த தரத்தில், மாதிரிகளுக்கு, சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல்.

தகைமை உடைய, அக்கறை உடைய தரப்பினருக்கு கொள்வனவில் கலந்துகொள்வதற்காக நியாயமான, சமனான மற்றும் அதி கூடிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொடுத்தல்.

உடனடியாக பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குதல்.

மதிப்பீடு மற்றும் தேர்வு செயற்பாட்டு நடைமுறையின் வெளிப்படைத் தன்மை மற்றும் நிரந்தரத் தன்மையை உறுதிப்படுத்தல்.

போன்ற தேவைப்பாடுகள் பூர்த்தியாகும் வகையில் 2014 ஆம் 2015 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 15,691,695,005 (கி.கா.கே)கிரயமான 250,693 மெ.தொ அரிசி இறக்குமதிச் செயற்பாடு அமுலாக்கப்பட்டிராமை முடிவாகியது.

(ஆ) இவ் அறிக்கையில் எடுத்துக் கூறப்பட்டுள்ள ரூபா 15,157,031,018 ஆன நட்டத்திற்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட வேண்டியதுடன் எதிர்காலத்தில் அத்தகைய நட்டங்கள் ஏற்படாத வண்ணம் கொள்வனவு நடைமுறை முறைப்படுத்தப்பட வேண்டியதாக முடிவாகியது.

(இ) அரிசி இறக்குமதி செய்யப்பட்டதன் மூலம் விவசாயப் பொருளாதாரத்திற்கு ஏற்படும் தாக்கம் தொடர்பாக போதிய கவனம் எடுக்கப்படாது செயற்பட்டிருந்தமை முடிவாகியது.

(ஈ) கொள்வனவின் போது தீர்மானம் எடுக்கப்படுவதற்கு உரித்தான சில முக்கிய தகவல்கள் அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் அமைச்சரவைக்கு வழங்கப்பட்டிராத சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை முடிவாகியது.

(உ) ரூபா 11,648,592,399 கிரயமான 182,548 மெ.தொ. இறக்குமதி செய்யப்படுவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படுவதற்கு செயற்பட்டிராமை மற்றும் முறையான அங்கீகாரம் இன்றி அரசாங்க நிதியைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தமை தொடர்பாக உரிய உத்தியோகத்தர்கள் பொறுப்பிற்கு உட்படுவதாக மேலும் முடிவாகியது.

(ஊ) இவ் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் உரிமைக்கட்டளை, வளங்கள் மற்றும் காலம் போன்ற நோக்கெல்லைகளுக்கு வரையறுக்கப்பட்டமையால் இதற்கு மேலாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முடிவிற்கு வர முடியாத அளவிற்கு சட்ட விரோத அல்லது குற்றவியல் நடவடிக்கைகள் நேர்ந்துள்ளதா என்பது குறித்து எனது பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகையால் அத்தகைய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கருதுவதாயின் அதற்கு நிபுணத்துவம் வாய்ந்த நிறுவகங்களின் உதவியைப் பெற்றுக்கொள்வது உகந்ததென முடிவாகியது.